இனிய கனிகள்

ஒற்றுமை ஆபீஸ், சென்னை-17

இனிய கனிகள்

★

எம். ரம்போலா மாஸ்கரேனஸ், எம். ஏ.
தமிழ்த்துறைத் தலைவர்,
செய்ன்ட் ஜோசப் கல்லூரி, திருச்சிராப்பள்ளி.

★

ஒற்றுமை ஆபீஸ்,
8, வியாசராவ் தெரு,
தியாகராய நகர், மதராஸ் - 17.

பதிப்புரிமை] 1957 [விலை ரூ. 1.

வாசகர்களுக்கு

திரு. ரம்போலா மாஸ்கரேனஸ் அவர்கள் திருச்சிராப்பள்ளி அகில இந்திய வானொலி நிலையத்தில் பேசிய பேச்சுக்களே **"இனிய கனிகள்"** என்ற பெயர் தாங்கி இந்த நூல் வடிவில் உருப்பெற்றுள்ளன.

இந்த நூல் இவரது வானொலிப் பேச்சு வரிசையில் இரண்டாவது நூல். எம் பதிப்பகத்தாலேயே இவரது வானொலிப் பேச்சு வரிசையின் முதல் நூலும் வெளியிடப்பெற்றது. **இலக்கியப் பொழில்** என்ற பெயர் கொண்டு விளங்கும் அந்நூல் அண்ணாமலைப் பல்கலைக் கழக மாணவர்க்குப் பாடப் புத்தகமாக அமைக்கப் பெற்ற சீர்த்தியுடையது. இலங்கை வானொலி நிலையத்தாரின் பாராட்டைப் பெற்றது. சென்னையிலும் பிற இடங்களிலும் பற்பல கல்வி நிலையங்களில் பாடப் புத்தகமாகவும் நூல் நிலைய வாசகப் புத்தகமாகவும் வைத்து ஆதரிக்கப்பெறுந் தகவுடையது.

பள்ளி மாணவர்கள், கல்வி அதிகாரிகள், பொது மக்கள் முதலியவர்களின் பேராதரவைப் பெற்றுள்ள இலக்கியப் பொழிலை அடுத்து இனிய கனிகள் கனிதல் பொருத்தமாம் அன்றோ? நல்ல மரம் நல்ல கனியைக் கொடுக்கும். நல்ல இலக்கியப் பொழில் நல்ல இன்சுவைக் கனிகளை ஈந்துள்ளது.

இத்தகைய நனிசிறந்தனவும் இனிமை நலம் சார்ந்தனவுமான இலக்கியக் கனிகளைத் தங்கள் முன் படைத்துள்ளோம். சுவைத்து இன்புறுவீர்கள் என்ற துணிபுடையோம்.

எம். இ. வீரபாகு,
பதிப்பாசிரியர்.

பொருளடக்கம்

*

			பக்கம்.
1.	அழகுணர்ச்சி	....	1
2.	குறுந்தொகை	....	11
3.	கலித்தொகை	....	20
4.	மெய்யான விமர்சனம்	....	27
5.	கல் வெட்டுக்கள்	....	35
6.	வேளாங்கண்ணி	....	44
7.	தெருக்கூத்து	....	53
8.	நந்திக்கலம்பகத் தோற்றம்	....	61
9.	பண்பாட்டின் காவலன்	....	70

இனிய கனிகள்

அழகுணர்ச்சி

கல்லில் சொல்லில் வண்ணத்தில் எண்ணத்தில் நாட்டியத்தில் நாடகத்தில் எத்திறத்தில் கலை தோன்றி னாலும், அது தோன்றி நிலவும் இடங்களிலெல்லாம் கவின் உணர்ச்சியும் இன்புறுத்தும் குறிக்கோளும் இழைந்து தழைக்கின்றன. கலைக்காப்பியம் அழகுணர்ச்சியின் நிலைக் காப்பியம்; இன்புறுத்தும் நோக்கில் இசைமிழற்றும் இலக் கியச் சோலை. அது கவிஞனின் உள்ளத்தில் கருவாகி உருவாகி முற்றிப் பழுத்த அநுபவ சேகரத்தின் அரிய மொழிபெயர்ப்பு. புலவன் தன் கைவண்ணம் கொண்டு சுவைஞரின் நெஞ்சை அள்ளும் செஞ்சொல் ஓவியம். இத்தகைய இயல்புகளால் சிரஞ்சீவித் தன்மைபெற்று விளங்குவது சிலப்பதிகாரம். சிலம்புச் செல்வம் என்று சிந்தனைச் செல்வர்களால் நன்கு மதிக்கப்பெறும் இக் கவின்கலைக் காப்பியம் ஐம்பெருங்காப்பிய வரிசையுள் அற்புதமான வனப்பமைந்த கலைக்கோபுரமாகத் திகழ் கின்றது.

இதனைப் படைத்து வழங்கிய வள்ளல் இளங்கோ இயற்கை அழகோடு நெருங்கிய உறவு கொண்டவர். கடலையும் நதியையும் வானையும் மலையையும் வயலையும் வெளியையும் உணர்வுக்கண்ணால் உற்று நோக்கியவர். தாம் கண்ட பேரழகைச் சீரிய கூரிய தீஞ்சுவைச் சொற்

களில் வடித்துச் சொல்லும் நல்வித்தை கைவரப்பெற்றவர். கண்ணுக்கழகு செவிக்கழகு உணர்வுக்கழகு கருத்துக் கழகு முதலிய அழகு நலன்களையெல்லாம் எண்ணி எண்ணி அழகோவியங்களில் தோய்ந்த அகத்தினராகவே தாம் நாட்டிய சிலப்பதிகாரத்திலும் அழகைக் காண்கின்றார்; அழகைக் காட்டுகின்றார்; அழகைப் போற்றுகின்றார்; அழகைப் போற்றப் பணிக்கின்றார்.

சிலப்பதிகாரக் கவின்கலைக் காட்சிகள் சிலவற்றைக் கண்டு மகிழ்வோம். அடிகளார் கோவலன் கண்ணகியை நமக்கு அறிமுகப்படுத்தும்போதே அவர்களை அழகின் கொழுந்துகளாக அறிமுகப்படுத்துகின்றார். கண்டாரால் விரும்பப்படும் தன்மை நோக்கம் அழகிற்கு இலக்கணம் என்றால் அதற்கு இலக்கியம் கோவலன்; அதற்கு இலக் கியம் கண்ணகி. வடிவமும் பொலிவும் திருத்தமும் பொருத்தமும் கவர்ச்சியும் இனிமையும் அழகிற்கு இலக் கணம் என்றால் அதற்கு இசைந்த இலக்கியங்கள் கோவல னும் கண்ணகியும்.

கோவலன் இந்த நிலவுலகமும் சிறிதாகும்படி அத் துணைப் பரந்து வளர்ந்த புகழ் வடிவினன். "உலகிலே கண்ணாரக் கண்டு வாயாரப் போற்றி மனதாரத் துதித்தற் கரிய முருகவேள் இவனே!" என்பது அவனைக் கண்ட மகளிர் கூட்டத்தாரின் முடிந்த முடிபு. அவர்கள் இவ் வாறு பேசிக்கொள்ளும் பாங்கில் அவன் வானுயர் தோற் றத்தை வளமாகப் பெற்றவன்.

> *"மண்தேய்த்த புகழினான் மதிமுக மடவார்தம்*
> *பண்தேய்த்த மொழியினால் ஆயத்துப் பாராட்டிக்*
> *கண்டேத்தும் செவ்வேளென் றிசைபோக்கிக் காதலால்*
> *கொண்டேத்தும் கிழமையான் கோவலனென் பான்*
> *[மன்னோ."*

திருமகளைப் பெண்களின் வடிவழகிற்கு வரம்பாகச் சொல்வது மரபு. கண்ணகியைப் பார்த்தவர்கள் "இவள் திருமகளைப் போன்றவள்" என்று சொல்லிவிடமாட்டார்கள். "திருமகள் கண்ணகியைப் போன்றவள்" என்றுதான் நிதானமாகச் சொல்வார்கள். அருந்ததியைக் கற்புக்கு வரம்பாகச் சொல்வது மரபு. கண்ணகியை அறிந்தவர்கள் "இவள் அருந்ததியை யொத்தவள்" என்று சொல்லிவிடமாட்டார்கள். "அருந்ததி கற்பினால் கண்ணகியை ஒத்தவள்" என்றுதான் கருத்தோடு சொல்வார்கள். "போதிலார் திருவினாள் புகழுடை வடிவென்றும் தீதிலா வடமீனின் திறம் இவள் திறமென்றும்" மாதரார் தொழுதேத்துவர்.

திருமண நாள் மணமக்கள் வாழ்வில் ஒரு பெருநாள். பொன்னெழுத்துக்களால் பொறிக்கத் தகுந்த நன்னாள். மங்கலமங்கையர் வளையொலிக்கும் கலகலப்பு, குறுநகைப் பாவையர் பேச்சில் எழும் வெடிச்சிரிப்பு, சுற்றஞ்சூழலில் காணப்படும் ஆரவாரம், இவற்றிடையே மன்றல் வீட்டை அணி செய்வதும் மணமக்களுக்கு ஒப்பனை ஏற்றுவதும் மணவிழாவை வரன்முறைச் சடங்குகளால் பொற்புடைய தாக்குவதும் இந்த நல்ல நாளின் தனிப்பெருஞ் சிறப்புக்கள். கோவலன் கண்ணகி திருமணத்தில் இந்நிகழ்ச்சிகள் ஒவியமெனத் தீட்டப்பெற்றுள்ளன. இந்த ஓவியம் காவிய உலகில் குன்றாத எழிலுடையதாக நின்று சோபித்து வருகின்றது.

அதோ வரிசை வரிசையாய் நிற்கும் அந்த வைர மணித் தூண்கள் திருமண மன்றத்தைத் தாங்கி நிற்கின்றன. அத்தூண்கள் சாதாரணத் தூண்கள் அல்ல. பன்னிறவொளிக் கதிர் பரக்க வீசும் நவரத்தினங்கள் நல்ல

அமைப்பாய் இழைக்கப்பெற்ற மணித்தூண்கள். அந்த மணித்தூண்களின் சென்னிகளைச் செழுமலர்த் தொங்கல்கள் சூழ்ந்துள்ளன. மணிமலர் மன்றத்தின் மேற்கட்டி நீலவானத்தை நிகர்த்த நீலப்பட்டால் ஆனது. அதனைப் பின்னணியாகக்கொண்டு விளங்குவது வெண்முத்துப் பந்தல். முதிய வேதியன் மறைவழி காட்டிட மணமக்கள் தீவலம் செய்கின்றனர். பின்னர் மணமேடையில் அமர்கின்றனர். மகளிர் மங்கல கீதம் பாடுகின்றனர். அவர்கள் சந்தனம் அகில் முதலிய பரிமளப் பொருட்களையும் சுண்ணமும் மலரும் மாலையும் போன்ற சுகபோகப் பொருட்களையும் கொண்டு வருகின்றனர். தீபங்கள், நிறை குடங்கள், முளைப்பாலிகைகள் முதலியவற்றை ஏந்திய வாழ்வரசிகள் "நீங்கள் இணைபிரியாது இன்ப வாழ்வு வாழ்வீர்களாக" என்று சின்மலர் தூவிப் பண்ணிசைக்கின்றார்கள்.

விரையினர் மலரினர் விளங்கு மேனியர்
உரையினர் பாட்டினர் ஒசிந்த நோக்கினர்
சாந்தினர் புகையினர் தயங்கு கோதையர்
ஏந்திள நகிலினர் இடித்த சுண்ணத்தர்
முளைக்குட நிரையினர் முகிழ்த்த மூரலர்
போதொடு விரிகூந்தல் பொலன்நறுங் கொடியன்னார்
காதலற் பிரியாமல் கவவுக்கை நெகிழாமல்
தீதறு கெனவேத்திச் சின்மலர் கொடுதூவி
அங்கண் உலகில் அருந்ததி அன்னாளை
மங்கல நல்லமளி ஏற்றினர்.

மணமக்களை மங்கையர் வாழ்த்தினர். மாநகரும் வாழ்த்தியது. மணம் பெற்ற இருவரும் புதுமனை புகுந்தனர். இச்செல்வப் பெருமக்கள் வாழையடி வாழையாக வாழ்ந்து வருவது காவிரிப்பூம்பட்டினம். இப்பட்டி

னத்தில் நாகர் உலகத்தின் அரும் போகமும் தேவர் உலகத்தின் பெரும் புகழும் மருவியிருந்தன, மணமக்களோ செல்வச் செழுங்குடி மக்கள். அவர்கள் இல்வாழ்க்கை இனிது நடைபெற ஒரு வளமான மாளிகையை அளிக்கின்றனர்கள் அவர்தம் பெற்றோர். அந்த மாளிகை அவர்கள் குடிநிலைக்கேற்ற ஏழடுக்கு மாளிகை. தோற்றத்தால் வீறுகொண்ட அந்த ஏழுநிலை மாடமாளிகை கட்டிடக் கலையின் எழில்நிலை மாடமாளிகை. இதனை வகுத்தமைத்த வல்லபன் தெய்வத் தச்சனாகிய மயன்தானோ என்று மக்கள் மயக்கமுற்று அதிசயிப்பர். அந்த மாளிகையின் ஒவ்வொரு பொருளும் அழகின் சின்னம். அப்பொருள்கள் அழகின் குமிழ் சிரிப்போடு கலை அன்பர்களுக்கு நல்வரவு கூறுகின்றன. கட்டில்கள் தவிசுகளின் கால்கள் இரத்தினங்கள் பதிக்கப்பெற்றவை, மாலைத்தாமத்து மணி நிரைத்து வகுத்த அக்கோலச் சாளரங்கள் மான் கண்ணை யொத்தன. தென்றல் காற்றை ஒரு சீராக நுழையவிட்டு மாளிகை வாசிகளுக்கு மகிழ்வூட்டுகின்றன. எழுநிலை மாடமாளிகையின் சிகரம் அகன்ற நிலா முற்றம். அந்த முற்றம் மன்மதப்பெருமான் கொலுவீற்றிருக்கும் மாண்புடையது.

நிலா முற்றத்தில் மலர்ப்பள்ளியில் மணமக்கள் இனிதமர்ந்து வெண்ணிலவின் இன்பத்தைத் துய்க்கின்றனர். நறும்பூஞ்சேக்கையுள் நம்பியும் நங்கையும் ஒருங்கமர்ந்திருக்கின்றனர். இக்காட்சியைக் கலை அழகு நிறைத்துக் காட்டுகின்றார் இளங்கோவடிகள். ஞாயிறும் திங்களும் வேறு வேறு வேளையில் வேறு வேறு திசைகளில் தோன்றும் தன்மையன. மதியத்தன்று மாலை வேளையில் மேற்றிசையில் செம்பரிதியும், கீழ்த்திசையில் வெண் திங்களும் காணப்படினும் அவை ஒருங்கிருந்து ஒளிசெய்வது

எந்நாளும் இல்லையே. ஆனால், கோவலன் கண்ணகி அருகருகே அமர்ந்திருக்கும் காட்சியில் இளங்கோவடிகள் சூரியனுஞ் சந்திரனும் ஒருங்கமர்ந்திருக்கும் அழகிய காட்சியையே காண்கின்றார். அக்காட்சி,

கரும்புமுடனக் கிடந்த நறும்பூஞ் சேக்கையுள்
முதிர்கடல் ஞாலம் முழுமையும் விளக்கும்
கதிர்ஒருங் கிருந்த காட்சி யாகப்

புனைந்துரைக்கப்பெற்றது.

இவ்வாறு கண்ணகியும் கோவலனும் கவினும் காதலும் சிறந்து வீற்றிருக்கும் வேளை. கண்ணகி, கோவலன் கண்ணுக்கும் கருத்திற்கும் விருந்தாய் முன் னமர்ந்திருக்கும் வேளையில் அவன்,

மாசறு பொன்னே வலம்புரி முத்தே
காசறு விரையே கரும்பே தேனே
அரும்பெறற் பாவாய் ஆருயிர் மருந்தே
பெருங்குடி வணிகன் பெருமட மகளே

என்று வெகு அருமையாக அவளை அழைத்து,

மலையிடைப் பிறவா மணியே என்கோ
அலையிடைப் பிறவா அமுதே என்கோ
யாழிடைப் பிறவா இசையே என்கோ
தாழிருங் கூந்தல் தையால் நின்னை

என்று அவளது நலம் பாராட்டும் திறத்தை அவன் முன் னமர்ந்த அழகென்பாள் அவனுக்கீந்த கவிதைத் திற மாகவே கருதவேண்டும்.

நாடகக் கணிகையர் குலத்துதித்தவள் மாதவி. அவ ளது வாழ்க்கையில் அணியும் கலையும் முகத்திரண்டு கண்ணாக மதிக்கப்பெற்று வந்தன. கணிகையர் ஆடல் பாடல் அழகு என்னும் முத்திறத்தால் பெயர் பெற்ற

வர்கள். அவர்களுள் இவள் தலைசிறந்தவள். ஐந்து வயதில் அவள் பாடப் பயின்றாள்; ஆடல் பழகினாள். ஏழாண்டு ஆர்வத்தோடும் ஊக்கத்தோடும் முறையாகப் பயின்ற பயிற்சியால் பன்னிரண்டாம் வயதில் கரிகாலன் முன்னிலையில் கலையரங்கேறினாள். அவள் நாட்டிய நன்னூல் நவின்ற வரிசை வழுவாது ஆடும் இயல்பினள். ஒருநாள் நடனத்திற்கு ஆயிரத்தெட்டுக் கழஞ்சு பொன்னைப் பரிசாகப் பெற்றவள் இவள் நடனங் காண இமயத்திலிருந்து விச்சாதரனும் தன் மனையாளோடு விரும்பி வருகின்றான். இந்திர விழாவின்போது இவளாடிய நடனத்தை விண்ணவரும் மறைந்திருந்து கண்டு களித்தனராம்.

அந்த இந்திர விழாவில் அவள் பதினொரு வகை ஆடல் ஆடினாள். பின்னர் கோவலனது ஊடலைத் தீர்க்க வேண்டியதாயிற்று. எப்பொழுது அவள் தன்னை ஒப்பனை செய்து கொள்கின்றாள். பத்துவகைப்பட்ட துவர்ப்பொருள்கள், ஐந்து வகைப்பட்ட மணப்பொருள்கள், முப்பத்திரு வகைப்பட்ட ஓமாலிகைகள் (herbs) இவற்றில் ஊறிக் காயப்பெற்ற நல்ல நீரில் குளிக்கின்றாள். நறும்புகையில் புலர்த்திய கூந்தலுக்குக் கஸ்தூரி குழம்பை ஊட்டுகின்றாள். அப்பால் சீறடி மெல்விரல் தொடங்கி உச்சிக்கொண்டை முடிய ஏறத்தாழ நாற்பது அணிகலன்களை அவள் அணிந்து கொள்கின்றாள். ஊடல் தீர்க்கும் பாங்கு ஒரு புறமிருக்கட்டும். அழகைப் பேணிப் பாதுகாக்க அழகிற்கு அழகு செய்ய, அழகை அழகால் வளர்க்க, அவளுக்கிருந்த ஆர்வம் இவற்றால் தெளிவாக அறியப்படும்.

அக்காலத்தில் ஆடவரும் மகளிரும் தம் மேனியைப் பலவகை அணிகலன்களால் அலங்கரித்துக்கொண்டார்கள்.

ஆடைகளும் அலங்காரப் பொருள்களாகவே கருதப் படுவனவாயினர். நறுமணப் பொருட்கள் மேற்பூச்சுக் கான சுண்ணம் வண்ணச்சாயம் பலவகைப் பூக்கள் இவற்றைப் பெரிதும் நாடினோர்கள் என்றும் அறிகின்றோம். பட்டு நூலாலும் பருத்தி நூலாலும் எலியின் ரோமத் தாலும் வகை வகையான ஆடைகள் செய்யப்பெற்றன. நம் நாட்டு ஆடைகள் போதாதென்றாற்போல, கோசிகம், பீதகம், பச்சிலை, அரத்தம், துண்துகில் எனப் பெயர் பெற்ற பட்டாடைகள் நம் நாட்டிற்குத் தொண்டித் துறைமுக வழியாய்த் திறைப்பொருளாய் வந்தன. பருவ காலத்திற்கேற்ற பக்குவமான பலப்பல ஆடைகளை அறுவை வீதிகளில் தேர்ந்து பெற்று உடுத்திக்கொள் வார்கள். ஆடவரும் அணிகலன்கள் அணிவதுண்டு. மதாணி முத்தாரம் இவைகளை அணிந்துகொள்வார்கள் என்று தெரிய வருகின்றது. பட்டுச் சாலியரும் சித்திரக் காரர்களும் சிற்பாசிரியர்களும் பொன்செய் கொல்லரும் ரத்தினப்பணித் தட்டாரும் நாட்டுப்புறங்களிலும் நகரங் களிலும் இருந்து கைத்திறத்தால் கலைத்திறத்தால் அபூர்வ மான விசித்திரமான தொழில்களைச் செய்து ஊதியம் பெற்றனர். துணியாலும் கிடேச்சாலும் விலங்கு பறவை புட்பம் வாடாமாலை முதலியவை செய்யப்பெற்றன. பொய்க்கொண்டை செய்யப்பெற்றதுமுண்டு. முத்துக் கோப்பவரும், அழகிய வளைகளை அறுப்பவருக்கும் ஆதரவு அதிகமாக இருந்தது.

சுகபோகப் பொருட்களின் பெருக்கால் புலன் இன் பங்களையும் கலைகளின் நிறைவால் அறிவின்பங்களையும் குறைவறப்பெற்று அவற்றால் மனந்தழைத்து வாழ்ந்து வந்த மக்களுள் போக போக்கியங்களின் அதிபதியும், தேவர்களுக்கெல்லாம் தலைவனுமான இந்திரனுக்கு

இருபத்தெட்டு நாட்கள் விழாக் கொண்டாட வசதியும் வாய்ப்பும் இருந்ததில் வியப்பொன்றுமில்லை. இந்திர விழா வில் புகார் நகரம் பொன்னகரமாகவே தோன்றுகின்றது. வீதிகள்தோறும் மகர தோரணங்கள், வீடுகள்தோறும் விழாக் கொடிகள், அறமன்றங்களில் ஆன்றோர்களின் விரிவுரைகள், இசையரங்குகளில் செவி அமுதப் பெருக்கு, நாடக மன்றங்களில் கண் கவர் காட்சிகள், பொற் பாலிகையுடன் பூரணகும்பம் சுமந்து செல்லும் பக்தர்கள் விண்ணவர் தலைவனை விழுநீராட்டி வழிபடுகின்றனர். விழாவின் கடை நாள் உவா நாள். அன்று மக்கள் திரள் திரளாகக் கடலாடச் செல்கின்றார்கள். கானற்சோலையில் குடும்பமாகக் கூட்டங் கூட்டமாகத் தங்கி ஆங்கு நிகழும் ஆடல் பாடல் கேளிக்கைகளில் கலந்து இன்புறு கின்றார்கள்.

திங்களைப்போற்றுதும் ஞாயிறு போற்றுதும் மாமழை போற்றுதும் என்று தமது காப்பியம் தொடங்கிய இளங் கோவடிகள் இயற்கைக்காட்சியினை எழில் ஓவியங்களாகத் தீட்டியிருக்கின்ற திறம் அறிந்து போற்றுதற்குரியது. கோவலன் கண்ணகி பூம்புகாரை நீத்துப் புறப்பட்டுப் போகின்ற வேளை வைகறை வேளை. அந்த வேளையை "வான்கண் விழியா வைகறை யாமம்" என்று நயம்படக் குறிக்கின்றார். மனிதனுக்கு கண் இருப்பதுபோல மாநிலத் திற்கும் கண் இருக்கின்றது. அதுதான் வான் கண்ணாகிய ஞாயிறு. நாம் கண் விழித்துப் பார்ப்பதுபோல வான் கண் ணும் கண் விழித்துப் பார்க்கும் இயல்பினதாம். வைகறை யாமத்தில் வான் கண்ணுக்கு விழிப்பில்லையாம். எனவே தான் அந்த வேளையை "வான்கண் விழியா வைகறை யாமம்" என்று சுவை பொருந்தச் சொல்லுகின்றார். இதனையே பிறிதோர் இடத்தில்

அன்ன மென்னடை நன்னீர்ப் பொய்கை
ஆம்பல் நாறும் தேம்பொதி நறுவிரை
தாமரைச் செவ்வாய்த் தண்ணறக் கூந்தல்
பாண்வாய் வண்டு நோதிறம் பாடக்
காண்வரு குவளைக் கண்மலர் விழிப்பப்
புள்வாய் முரசமொடு பொறிமலர் வாரணத்து
முள்வாய்ச் சங்கம் முறைமுறை ஆர்ப்ப
அரவுநீர்ப் பரப்பின் ஊர்துயில் எடுப்பி
இரவுத்தலைப் பெயரும் வைகறை

என்று இனிமை நலங்கனிய விரிவாக எடுத்துரைக்கின்றார்.

அன்னமாகிய மென்னடையினையும் ஆம்பல்நாறும் தாமரையாகிய வாயினையும் குளிர்ந்தஅறலாகிய கூந்தலையும் உடைய பொய்கை என்பாள் பாண் தன்மையையுடைய வண்டுகளாகிய பள்ளி யுணர்த்துவார் பள்ளி யெழுச்சி பாட, குவளைக் கண்மலர் விழிக்க. முரசும் கோழியும் சங்கமும் முறை முறை ஆர்ப்ப, கடல் போலும் பரப்பையும் ஒலியையுமுடைய ஊரைத் துயில் எழுப்பி இரவு இருள் நீங்கும் வைகறை என்றதில் வைகறை நம் கண்முன் நிற்கக் காண்கின்றோம்.

“தாழ்துணை துறந்தோர் தனித்துயர் எய்த
காதலர்ப் புணர்ந்தோர் களிமகிழ் வெய்தக்
குழல்வளர் முல்லையில் கோவலர் தம்மொடு
மழலைத் தும்பி வாய்வைத் தூத
அறுகாற் குறும்பெறிந்து அரும்பு பொதிவாசம்
சிறுகாற் செல்வன் மறுகில் தூற்ற
வெல்வளை மகளிர் மணிவிளக் கெடுப்ப
மல்லன் மூதூர் மாலைவந் திறுத்தென”

என்பதில் பிரிந்தோர் துயர் எய்த, புணர்ந்தோர் மகிழ் வெய்தத் தும்பி ஊத மணத்தை மந்தமாருதமாகிய செல்

வன் தூற்ற மகளிர் விளக்கெடுப்ப மாலை வந்துவிட்டது என்று அழகுபட மொழிகின்றார்.

"புலவர் நாவில் பொருந்திய தென்றல்" என்றும் புலவர் நாவில் பொருந்திய பூங்கொடிவையை" என்றும் இளங்கோவடிகளை இயம்புகின்றபடி இயற்கைக் காட்சிக ளான காலை காட்சியும் மாலைக் காட்சியும் மலைக் காட்சி யும் நதிக் காட்சியும் இன்ன பிற காட்சிகளும் இப்புலவர் திருநாவில் பொருந்தி வருகின்றபோது அவை தனிப் பேர் அழகுடையவான நிலைபெறுகின்றன. அழகு அலை வீசி ஒளிர்கின்றன.

குறுந்தொகை

இயற்கைக் காட்சிகளைக் காணுந்தோறும் காணுந் தோறும் கழிபேருவகை எய்தி வருகின்றோம். இக் காட்சிகள் கற்றோர்க்கும் கல்லார்க்கும் களிப்பளிக்கும் களிப்பாக விளங்கி வருகின்றன. பண்டிதர்க்கும் பாம ரர்க்கும் இன்பம் அளிக்கும் இன்பமாகத் திகழ்ந்து வரு கின்றன. போகியர்க்கும் யோகியர்க்கும் ஒருசேர மகிழ் வளிக்கும் மகிழ்வாக ஒளிர்ந்து வருகின்றன. திங்களையும் ஞாயிற்றையும் வானமண்டலத்தையும் விண்மீன்களையும் மழைமேகத்தையும் மாநதியையும் கடலையும் காட்டையும் மலையையும் வயலையும் உளக்கண்ணோடு உற்றுநோக்கு வார்க்கு அவை வெள்ளம்போன்ற உணர்ச்சிப்பெருக்கை உள்ளங்களில் வார்க்கின்றன என்பது அநுபவ சித்தாந்தம்.

தாம் கண்ட கவினுறு காட்சிகளை அழகு குன்றுத வகையில் வருணித்துரைக்கும் வரமுடையாரும் உர முடையாரும் ஒரு சிலரே. பலரிடத்து அக்காட்சிகள்

மனத்தளவிலே அடங்கிப்போகின்றன. ஊமையன் கண்ட கனவாக உறைந்துகிடக்கின்றன. சொல் விற்பன்னமுடையார் கவி சொல்லவல்ல நல்வித்தை கைவரப்பெற்றோர் உரையால் பாட்டால் இவற்றைத் தீட்டிக்காட்டும் திறனுடையவர் ஆவர். நாமும் பல பொழில்களைப் பார்க்கின்றோம். அநுபவித்து ஆனந்தம் அடைகிறோம். ஆனால், சொல்லின் வல்லான், தான் காண்கின்றதை, கண்டு மகிழ்கின்றதை எழுத்தோவியத்தில் வடித்துக் காட்டிப் பிறரையும் மகிழ்விக்கின்றான். அவன் அன்றுகண்ட பொழில் அவனது மந்திரச்சொற்களால் "சந்தனமும் சண்பகமும், தேமாவும் தீம்பலமும், ஆசினியும் அசோகமும், கோங்கும் வேங்கையும் குரவமும் விரிந்து, நாகமும் திலகமும் நறவும் நந்தியும், மாதவியும் மல்லிகையும், மவ்வலொடு மணங் கமழ்ந்து, பாதிரியும் பாவை ஞாழலும் பைங்கொன்றையொடு பிணியவிழ்ந்து பொரிப்புன்கும் புன்னாகமும் முருக்கொடு முகை சிறந்து, வண்டறைந்து தேனார்ந்து வரிக் குயில்கள் இசைபாடத் தண்தென்றல் இடைவிராய்த் தனியவரை முனிவு செய்யும் பொழிலாக" என்றும் நின்று விளங்கும் நிலைக்காட்சியாக மிளிர்கின்றது.

நெடுந்தொகையைப் போலவோ ஏனைய தொகை நூல்களைப் போலவோ நீண்ட வருணனைகளுக்குக் குறுந்தொகையில் இடமில்லை. பாக்கள் யாவும் நான்கடிச் சிற்றெல்லை உடையன; எட்டடிப் பேரெல்லை உடையன. இன்னனைய சொற்சுருக்கத்தில் பொருட்பெருக்கம்காட்டும் கடப்பாடுடையவர்கள் குறுந்தொகைப் புலவர்கள். எனவே காட்சிக்கும் கருத்துக்கும் விருந்தாக அவர்கள் அளிக்கும் அழகு வர்ணனைகள் சொற்செட்டோடு பொருட்பொலிவும் பொருந்தி இலங்குகின்றன. நிரம்பிய

போற்றல் உடைய ஓவிய வல்லுநர்கள் ஒரு சில கீற்றுக்க ளால் உயிர்த்தத்துவமுடைய வடிவங்களை நம் கண் முன்னே கொண்டு நிறுத்துமாறுபோல நுண்மாண்நுழை புலமுடைய இப்புலவர் பெருந்தகையரும் ஒரு சில சொற் களில் உயிர் ஓவியம் எனத்தகும் இயற்கை எழிற்படம் சித்தரிக்கின்றார்கள். கைபுனைந்தியற்றுக் கவின்பெறு வனப்பைக் கலை நடம்புரியும் கவியால் புனைந்து காட்டு கின்றார்கள்.

குறுந்தொகைச் செய்யுட் கோவையுள் ஆங்காங்கே சுட்டப்பெற்ற செய்திகளைக்கொண்டு குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்னும் ஐவகை நிலங்களின் ஏற்றத்தையும் தோற்றத்தையும் இசைத்துக் காண்போம்.

முதல்முதல் நமது கண்ணைக் கவர்வது மலைப்பகுதி யாகிய குறிஞ்சி. வானோங்கி வளர்ந்த வளமலைகள் காண்போர் உளமோங்கச் செய்யும் பான்மைய. அங்கே வாழையே சோலையாக வளருந்தன்மைய; செறிவுடைய சோலையின் ஊடே குயில்கள் நுழையலாமேயன்றிப் பகலவன் கதிர்கள் நுழைவதற்கில்லை. மலையிலிருந்து இழிதரும் அருவி தூய வெண்மையாக உள்ளது. அது வளைந்து வளைந்து வருகின்றது. இதனால் அது பாம்பின் உரிபோன்றது என்றும் பாம்புபோன்றது என்றும் சொல் லப்பெறும். வாழை, பலா, காந்தள், கொறுக்கரந்தட்டை முதலிய மலர்க்குவியல்களை அருவிகள் அடித்துக்கொண்டு வருகின்றன. முழவின் முழக்கத்தோடும் முரசின் ஒலி யோடும் அவை இன்னிசை எழுப்பி வீழ்கின்றன. அருவியின் வேகத்திற்குத் தேரோட்ட வேகம் உவமை யாக உரைக்கப்பெறும். மலையை அடுத்துள்ள குன்றுகள் யானைகளைப்போல்வன. மழை பெய்யாமல் புழுதி படிந்

துள்ள குன்றுகள் கழுவப்படாத யானைகளைப்போல்வன. அடைகளிலிருந்து தேன் சொரியும். உயர்ந்த இடங்களி லுள்ள தேனை ஒற்றை மூங்கில் ஏணிகொண்டு ஏறி எடுப்பர். குறிஞ்சிப்பூ பன்னிரு ஆண்டுகளுக்கொரு முறை பூக்கும் என்பர். அந்த மலர்களிலிருந்து வெளிப் படும் தேனாறு காறாறு எனப் பெருகிப் பாயும். சாரலில் தினை அரிசியும் ஐவனமும் அவரைக்கொடியும் கவலைக் கிழங்கும் செழித்து விளையும். தினைப்புனத்தைப் பரண் இட்டுக் காப்பார்கள். பயிரைக் கவர்ந்துண்ண வரும் பறவைகள், விலங்குகளைக் கவண் எறிந்து ஓட்டுவார்கள். இரவில் கொள்ளிக்கட்டை தாங்கி காவல் புரிவார்கள். பலாவினைக் குரங்குகள் சிதைத்துச் செல்லாதபடி மரந் தோறும் வலைகளை மாட்டி வைப்பார்கள்.

குறிஞ்சி நிலம் குறிஞ்சி என்னும் மலரால் பெயர் பெற்றது. அதுபோலவே முல்லை நிலம் முல்லை என்னும் மலரால் பெயர்பெற்றது எனக் கொள்ளத்தகும். கொன்றையும் பித்திகமும் பீர்க்கும் கருவிளையும் ஈங்கை யும் குருந்தும் பிடவமும் அவரையும் முல்லை நிலத்து மலர்களே. எனினும் முல்லை மலரே இவற்றுள் முதன் மைய எனதாகக் கருதப்பெறும். "முல்லை சான்ற முல்லையம் புறவு" என்பர் நல்லூர் நத்தத்தனார். கடமா, ஆமா, ஆடு, மாடு, குதிரை, புலி முதலியன இந்நிலத்து விலங்கினங்களுட் சில. மயில், காகம், கோழி முதலியன இந்நிலத்துப் பறவையினங்களுட் சில. மேகங்கள் கருக் கொண்டெழுந்து மின்னி இடித்து மழை பெய்ய ஆர வாரிக்கும் கார்காலம் முல்லைக்குச் சிறந்த காலம். மையல் மலரும் மாலைப்பொழுது முல்லைக்குச் சிறந்த பொழுது. செம்மண் பரந்துள்ள காரணத்தால் இந்நிலம் செம்புலம்

என்றும் பெயர்பெறும். இடையர்கள் கன்றுகாலிகளை மேய்க்கும் காட்சியும் இடைச்சியர் தம் கணவர்க்குப் பாற்சோற்றுணவு பரிமாறும் காட்சியும் வரகு விதைக்கும் காட்சியும் மழையை முன்னிட்டு இங்குளோர் பரியோலை தலையிற் கவித்துள்ள காட்சியும் இங்கே காணத்தகும் சிறப்பான காட்சிகள்.

நயத்தகு நாகரிகத்திற்கும் வியத்தகு ஊராண்மைக்கும் விளைவிடமான விளைபுலம் சார்ந்தது மருதம். மருதத் தண் பண்ணையில் பூத்த இல்வாழ்க்கை பல்லாற்றானும் இனிது மலர்வதைப் பார்க்கின்றோம். இங்கேயுள்ள செந் நெற்கழனிகள் ஊற்று நீராலும் ஆற்று நீராலும் ஊட்டப் பெற்றுப் பசுமை சிறந்து புதுமைவளம் கொழிக்கின்றன. மென்சினைக் காஞ்சியும் செவ்வீ மருதும் வெண்பூக் கரும்பும் விளைகனிப் பிரம்பும் வயின் வயின் தோன்று கின்றன. வயல்களிலும் நீர்நிலைகளிலும் கணைக்கோட்டு வாளையும் கெண்டையும் அயிரையும் துள்ளி விளையாடிக் களிக்கின்றன. நீர்நாய் வெருகு குருவி குருகு மனைக் கோழி முதலியன இந்நிலத்திற்குப் பயனும் பொலிவும் பொருந்தப் புரிகின்றன.

கடற்கரையோரத்தில் மணல் மேடுகளில் குடிசை வேய்ந்து வாழ்கின்றூர்கள் நெய்தல் நில மக்கள். அவர்கள் சேர்ந்துறையும் இடங்கள் சிறுநல்லூர் என வழங்கும். உடற்குறுதிதரும் உப்பங்காற்று உலவிவரும் கடற்கரைச் சோலைகள் தனிப்பெரும் வனப்புடையன. மணல் திட்டு இயல்பாகவே மெத்தென்றிருக்கும். சோலையிலுள்ள மரஞ்செடிகளின் சுகந்த மலர்கள் அம்மேடுகளில் பரந்து கிடப்பதால் அவைகள் மேலும் மென்மையாகும். இவ்வாறு இயற்கை இயற்றிக்கொடுத்த மாண்பார்

பாயலில் அங்கிலத்துத் தலைவர் தலைவியர் மகிழ்ந்தமர்ந்து அளவளாவி இன்பம் துய்ப்பர்.

பாலை ஒரு விசித்திரமான நிலம். "இன்னு வைப்பு" என்று பெயர் படைத்த இங்நிலத்திலேயும் இனிமை காண்பார் இதன் இயல்புணர்ந்தோர். இங்கே தடாகம் இருந்தாலும் தண்ணீர் இராது. சுனை இருந்தாலும் அது நனைதல் அற்ற வெறுஞ் சுனையாக இருக்கும். இருக்கின்ற மரஞ் செடிகள் வற்றியவை வாடியவை. சூழ்ந்து திரிகின்ற பறவையினங்கள் விலங்கினங்கள் வலியிழந்தவை; பொலி விழந்தவை. ஒரோ விடங்களில் மிக அரிதாகச் சிறு பள்ளங்களிலே மிகச் சிறு அளவிலே தண்ணீர் உண்டு. அதுவும் சேற்றொடுபட்ட சிறுமையுடையது. சருகுகள் வீழ்ந்து கலங்கலானது. மணங்கெட்ட அந்நீரையும் மெய்யன்புடையவர் மகிழ்வோடு பகிர்ந்து குடிப்பர். அறத்தின் பொருட்டாக ஆங்காங்கே நெல்லி மரங்கள் வளர்க்கப்பெற்றிருக்கும். நெல்லிக் கனியை யுண்டு தாகந் தீர்ப்பார் பலர். பறவைகள் விலங்கினங்கள் மரப்பட்டையைக் கொத்தித் தின்றும் உரித்துண்டும் தாகந்தணிக்கும். பாலை வழிச்செல்வோர்க்கு அநேக சமயங்களில் பருந்தின் ஒலியே உசாத்துணையாகும். தனிவழிச் செல்லத் தயங்கியே உப்புவணிகர் கூட்டம் கூட்டமாகச் செல்வார்கள்.

குறிஞ்சி நிலத்திலே ஓர் அழகுக் காட்சி. அரும்புத் தன்மை அறவே இல்லையாகப் பரிபூரணமாக மலர்ந்துள்ளது வேங்கை. அம்மரம் கருமையான அடிப்பாகத்தைக்கொண்டது. அதன் உயர்ந்தோங்கிய கிளையின் உச்சியில் ஒரு மயில் தங்கியுள்ளது. அந்த மயில் பூக்கொய் மகளிரின் அழகு நலத்தை நிகர்த்து நலங்கனிய நல்லெழில் காட்சி நல்குகின்றது. மகளிரை மயில் அன்ன

சாயலவர் என்று வர்ணிப்பது முறைமை. ஆனல் குறுந்தொகைப் பாவலர் மகளிர் போன்ற மயில் என்ருர் மயிலினும் விஞ்சிய பேரழகுச் சாயலும் பெரியதோர் மென்மைத் தன்மையும் இம் மகளிர்க்கு உண்டு என்பது காட்ட.

அரும்பற மலர்ந்த கருங்கால் வேங்கை
மேக்கெழு பெருஞ்சினை இருந்த தோகை
பூக்கொய் மகளிரில் தோன்றும்... (26)

இதோ குறிஞ்சி நிலத்தில் இன்னெரு தோற்றம். மரங்களைக் கொளுத்திச் சுட்டதால் உண்டான கொல்லை. அக்கொல்லை இப்பொழுது தினைப்புனமாகத் திரிந்துள்ளது. அப்புனத்திலே ஒரு வேட்டுவப் பெண். அவள் தன் கையில் குருவி முதலியன ஓட்டும் குளிர் என்னும் தட்டையுடன் நிற்கின்ருள். அக்கருவி இசையோடு பொருந்திய இனிய நாதத்தை எழுப்பவல்லது. அதன் மிருதுவான ஓசையைக்கேட்ட கிளிகள் தாம்படிந்த தினையி னின்றும் எழுந்துபோக இசையவில்லை. பாவம் அவளால் என்ன செய்ய இயலும்? கண்ணீர் வடிக்கின்ருள். அந்நிலையில் அவளது கண்ணீர் மல்கிய கண்கள் ஆழ்ந்த நீரை யுடைய பசுமையான சுனையில் பூத்த வண்டு படிந்த குவளை மலர்களைப்போல காணப்பெறுகின்றன.

சுடுபுன மருங்கில் கலித்த வேனல்
படுகிளி கடியும் கொடிச்சிகைக் குளிரே
இசையின் இசையா இன்பா ணித்தே
கிளியவள் விளியென எழலொல் லாவே
அதுபுலந் தழுத கண்ணே சாரல்
குண்டுநீர்ப் பைஞ்சுனைப் பூத்த குவளை
வண்டுபயில் பல்லிதழ் கலைஇத்
தண்டுளிக் கேற்ற மலர்போன் றனவே. (290)

தலைவியைப் பிரிந்த தலைவன் தான் மேற்கொண்ட அலுவலை நிறைவேற்றினனாக விரைந்து வீடு நோக்கி வருகின்றான். அவ்வேளை மாலை வேளை. அவன் செல்லும் வேகம் கண்ட புத்தம் புதிய முல்லை அவனை இகழ்வது போல முறுவல் பூக்கின்றதாம். கானகத்திலே, காலத்திலே, இயல்பாக மலர்ந்த முல்லைக்கொடி அவனை நோக்கிக் குறும்பு நகை செய்வதாக அவன் உளங்கொண்டு உரைப்பதில் இலக்கிய அழகின் சிரிப்பொலியையும் கேட்கின்றோம்.

"முல்லையே! நீ வாழ்க! மேகத்தால் காக்கப்பெற்ற நீரையுடைய அகன்ற முல்லை நில எல்லையில் வினைமுற்றி மீள்வார் தத்தம் இல்லங்களுக்கு விருப்போடு விரைந்தேகும் வேளை இது. ஒளி சாய்ந்து இருள் சூழும் வேளை இது. இப்பொழுது நீ உன் சிறிய வெள்ளரும்புகளால் என்னை நோக்கிப் புன்முறுவல் கொள்கின்றாய்! தலைவியைப் பிரிந்ததால் தனிப்பெருந் துயருற்று வருந்தும் என்னிடத்து இரக்கம் கொள்வதா? அன்றி எள்ளி நகையாடுவதா? உனது ஏளனச் சிரிப்பு உன் மெல்லியல்புக்கு இசைந்ததுதானா? இது தகுமா? இது தருமந்தானா?" என்று முல்லையோடு சொல்லாடிக் கொண்டே விரைகின்றான் தலைவன்.

கார்புறந் தந்த நீருடை வியன்புலத்து
பலர்புகு தரூஉம் புல்லென் மாலை
முல்லை வாழியோ முல்லை நீநின்
சிறுவெண் முகையின் முறுவல் கொண்டனை
நகுவை போலக் காட்டல்
தகுமோ மற்றிது தமியோர் மாட்டே. (162)

இனி ஒரு மருதச் செய்தி. தலைவி நெஞ்சால் நெடுந் தொலைவில் இருக்கின்றாள். தலைவனோ ஊடல் தீர்க்கும்

ஆற்றல் இழந்திருக்கிருன். இந்த நிலைமையில் அவன் தலைவியை நாடுவது பயனற்ற செயல் அல்லவா? இதை விளக்க ஓர் உதாரணம். கிழக்குக் கடற்கரையில் ஒரு நாரை. அது சிறகிழந்த கிழம். இந்த லட்சணத்தில் அது மேலைக் கடலிலுள்ள மீனுக்காகத் தலையைத் தூக்கித் தூக்கிப் பார்க்கின்றதாம். பயனற்ற செயல் அன்றோ!

குணகடல் திரையது பறைதபு நாரை
திண்டேர்ப் பொறையன் தொண்டி முன்றுறை
அயிரை ஆர்இரைக் கணவந் தாங்குச்
சேயள் அரியோள் படர்தி
நோயை நெஞ்சே நோய்ப்பா லோயே. (128)

அதோ நிற்பது ஒரு கொக்கு. அது மாரிக் காலத்து ஆம்பல் மலரை ஒத்துள்ளது. அக் கொக்கின் புறத்தே அலைநீர்த் திவலைகள் காணப்படுகின்றன. ஆதலின் அது மாரியால் நனைந்த ஆம்பலைப் போன்றிருக்கின்றது. அதன் பார்வையே நண்டுக்குப் பேரச்சம் தருகின்றது. அதனைக் கண்டதும் ஈர நண்டு எடுக்கின்றது ஓட்டம். தாழை வேரிடையேயுள்ள வளைக்குள்ளே செல்லும்பொருட்டு இடையரால் பிணிக்கப்பெற்ற கயிற்றை அறுத்துச் செல்லும் எருதைப் போல விரைகின்றதற்கு இடமாகின்றது கடற்றுறை.

மாரி ஆம்பல் அன்ன கொக்கின்
பார்வல் அஞ்சிய பருவரல் ஈர்ஞெண்டு
கண்டல் வேரளைச் செலீஇயர் அண்டர்
கயிறரி எருத்தில் கதழுந் துறை... (117)

பாலை வழியில் உள்ள யாமரத்தின் பொரிந்த திரண்ட அடியை உருவும்படியாக ஆண் யானை தன் கொம்பால் குத்துகின்றது. குத்தி எடுத்தவற்றைத் தன்

வன்மை வாய்ந்த கையால் தனது பிடிக்கும் கன்றுகளுக்கும் கொடுத்து அவற்றின் பெரும் பசியைப் போக்குகின்றது.

> பொத்தியல் காழ வந்த யாஅத்துப்
> பொரியரை முழுமுத லுருவக் குத்தி
> மறங்கெழு தடக்கையின் வாங்கி உயங்குடைச்
> சிறுகண் பெருநிரை உறுபசி தீர்க்கும்
> தடமருப் பியானை...... (255).

அரிய அகவல் பாக்கள் நானூறு அமைந்த குறுந்தொகை, சொல்லாலும் பொருளாலும் நன்மை பொருந்திய நல்ல குறுந்தொகை, சங்கங் கண்ட துங்கப் புலவர்கள் தேடித்தந்த இலக்கியச் செல்வம். இயற்கை அழகின் வருணனைப் பேழையும் குண நல வருணனைகளின் களஞ்சியமும் உள்ளுறைப் பொருள்களின் உறைவிடமும், இல்வாழ்க்கை ஒழுக்கங்களின் சேகரமும், பழந்தமிழர் பண்பாட்டுப் பெட்டகமுமான இக் குறுந்தொகையை நன்கு போற்றிப் பயின்று நலம் பெறுவோமாக!

கலித்தொகை

கவிவாணர்கள் இயற்கையைக் கூர்ந்து பார்க்கிறார்கள். அதன் அழகு நலத்தைக் கண்ணுறக் காண்கிறார்கள். ஊனக்கண்ணால் மட்டும் அல்ல; உள்ளக் கண்ணாலும் உற்று நோக்குகிறார்கள். அவர்களுக்கு இவ்வுலகம் ஒரு கலை நிலையம்; கதிரவனும், குளிர்நிலவும் காடும், ஆறும் வயலும் வெளியும் கடலும் மலையும், ஆசிரியர்கள். இயற்கைஆசிரியர்கள் பாவலர்களின் கண்ணுக்கும் கருத்துக்கும் விருந்தளிக்கும் பான்மையர்

கவிஞர்கள் காணும் காட்சிகள் அவர்கள் அக உணர்வைத் தூண்டுகின்றன. அவ்வின்பக் காட்சிகளைப் பிறரும் காணவேண்டி கற்பனை நயம் சிறக்கவும் கலை நலம் மலியவும் அவற்றை உருவாக்குகின்றனர். அக்காட்சி களின் தொடர்பினுல் எழும் உன்னத உணர்ச்சிகளைச் சொல்லோவியத்தில் வடித்துக் கொடுக்கின்றுர்கள்.

கலித்தொகை இயற்கைப் பெரும் புலவர் எழுப்பிய கலைக்கோவில். இக்கோவிலில் அன்புப் பணிசெய்த அரிய பாவாணர் ஐவர். சேரமான் பாலைபாடிய பெருங்கடுங் கோ, கபிலர், மதுரை மருதனின் நாகனுர், சோழன் நல்லுருத்திரன். நல்லந்துவனுர் ஆகிய இவர்களே இக் கோவிலில் ஆர்வமாலைசூட்டி அணிசெய்தவர்கள். இதனை நிர்மாணித்தவர் ஒருவரே என்றும் அவரும் பாண்டிநாட்டு நல்லந்துவனுரே எனவும் கூறுவார் உளர். ஐவரோ ஒருவரோ அன்றிப் பலரோ? இது அறுதியிட்டுக் கூறப் படாததொன்று.

இத்தொகையில் அழுத்தமான அழகுணர்ச்சி தரும்பும் நூற்றைம்பது முழுமணிப்பாக்கள் உண்டு இவை சங்க நாத முழக்கம்போல ஓசை தழைத்து செவி இன்பந் தருபவை. திரையிலிடப்பட்ட படம்போல காட்சி நலம் செறிபவை. இப்பாக்களிலே இயற்கையோடியைந்த புலவர், தமிழகத்தின் பல பகுதிகளுக்கும் சென்று நீல வானத்தையும் நிவந்தெழு மலைத்தொடரையும் துள்ளி யோடும் காட்டாறுகளையும் கண்டு தம் அநுபவத்தில் பொருந்திய உணர்ச்சிகளையும் மக்கள் அகவாழ்வில் காணும் நிகழ்ச்சிகளையும் வழங்கக் காணலாம்.

இதனுள் கருத்தொருமித்த காதலர்களின் வாழ்க்கை விளக்கம் தோன்றும். அவர்கள் உடனுறைந்து இன்புற்று

வாழ்வதைக் குறிஞ்சிக் கலியில் காண்கிறோம். சிறு கோபங்கொண்டு ஊடிக்கொள்வதை மருதக் கலியில் உணர்கிறோம். உடன் போக்கையும் பிரிவுத் துயரையும் பாலைக் கலியில் பார்க்கிறோம். பிரிந்து ஆற்றியிருப்பதை முல்லைக் கலியிலும் பிரிவால் வருந்தியிருப்பதை நெய்தற் கலியிலும் அறிகின்றோம்.

இன்ன நிலத்தில் இன்ன அகவொழுக்கந்தான் நடைபெறவேண்டும் என்றவரையறை உண்டோ? அப்படியொன்றுமில்லை. குறிஞ்சியில் கூடல், மருதத்தில் ஊடல், பாலையிலி பிரிதல், முல்லையில் ஆற்றல், நெய்தலில் இரங்கல், என்பதெல்லாம் ஒரு நாடக அமைப்பே. ஐவகை நிலங்களின் பின்னணிகாட்டி அவ்வந்நிலத்திற்குரிய தெய்வம், தாவரம், உணவு, விலங்கு, பறவை ஆகிய இவற்றோடு இல்வாழ்க்கை நிகழ்ச்சிகளுக்கு எழிலூட்ட ஏற்பட்டதே.

நாம் காலை மாலைகளைக் காண்கிறோம். காலையில் சூரியன் எழுகிறான். மாலையில் அவன் மறைகிறான். இதைத் தவிரச் சிறப்பாக வேறெதுவும் தோன்றுகின்றதா? புலமை உணர்ச்சி உடையவர் "சூரியன் சாய, காரிருள் மெல்லச் சூழ்ந்திட யாவும் சோர்ந்திடும் வேளை" என்று மாலைக் காலத்திற்கு வர்ணந்திட்ட முயல்வர். கலித்தொகையில் ஒரு மாலைக்கால வர்ணனை காண்போம். இங்கே வர்ணந்தீட்டுதல் மட்டுமல்ல. அழகியதொரு படப்பிடிப்பு இன்னேசை நலம் இசைந்த ஒலிப்பதிவு.

"அகன்ற உலகத்தை உயிர்களுக்குக் காட்டுகின்ற பல கதிர்களைத் தனக்கு வாயாகக்கொண்டு பகற் பொழுதை உமிழ்ந்தான் பகலவன். அவனே அதனை மீண்டும் விழுங்கிக் கொண்டான் போல மேற்கு மலையில் சேர்கிறான்.

சக்கர ஆயுதம் கொண்ட திருமால் நிறம் போல இருள் கருமையாகப் படர்கின்றது.

நிலவு அவ்விருளைப் புறங்காண்பது போல அதனோடு மாறுபட்டு வானத்தில் எழுகின்றது.

தம் புகழைத் தமக்கெதிரிலே சொல்லக்கேட்ட சான்றோர்களைப் போல தலை சாய்த்து மரங்கள் தூங்குகின்றன.

பறவைகள் தம் குஞ்சுகளை நினைத்து கூடுகளில் வந்தடைகின்றன. பசுக்கள் தாம் தங்கும் ஊர்களிலுள்ள தம் கன்றுகளின்மேல் வைத்த விருப்பத்தோடு தொழுக்களில் நிறையப் புகுகின்றன. பிற விலங்குகள் தாம் தாம் தங்குமிடங்களில் வந்து சேர்கின்றன. அந்தணர்கள் தம் கடமைகளை முடித்து அந்திக் காலத்தை எதிர் நோக்குகிறார்கள்.

பெண்கள் செந்தீயால் செவ்வண்ணமான விளக்குகளை ஏற்றத் தொடங்குகிறார்கள்.

இதோ! கலித்தொகைதரும் சொற்சித்திரம்; ஒலிப்பதிவு.

"அகல்ஞாலம் விளக்குந்தன் பல்கதிர் வாயாகப்
பகல்நுங்கி யதுபோலப் படுசுடர் கல்சேர
இகல்மிகு நேமியான் நிறம்போல இருள்இவர
நிலவுக்காண் பதுபோல அணிமதி ஏர்தர
தம்புகழ் கேட்டார்போல் தலைசாய்த்து மரந்துஞ்ச
முறுவல்கொள் பவைபோல முகையவிழ்பு புதல்நந்தச்
சிறுவெதிர்ங் குழல்போலச் சுரும்பிஇமிர்ந் திடும்மெனப்
பறவைதம் பார்ப்புள்ளக் கறவைதம் பதிவயின்
கன்றமர் விருப்போடு மன்றுநிறை புகுதர
மாவதிசேர மாலை வாள்கொள
அந்தி அந்தணர் எதிர்கொள அயர்ந்து
செந்தீச் செவ்வழல் தொடங்க வந்தது." (119)

காதலனைப் பிரிந்து தனித்துப் புலம்பும் காதலி மாலைக் காலத்தைக் கடிகின்றாள். 'மருட்சியைத் தரும் மாலைக் காலமே' என்று கோபித்துக் கொள்கிறாள். அந்த மாலைக் காலம் பகலுக்கும் இரவிற்கும் இடைப்பட்ட காலம். ஒரு அரசன் தனது ஆட்சிக்காலம் முடிந்ததாக சுவர்க்கம் புகு பவன்போல பகலவன் மறைந்து விடுகிறான். அவ்வரச னுக்கு பகைவனான அரசன் சிறிதுகாலம் ஆட்சி செலுத்து வதுபோல சந்திரன் இருளைப் போக்குகின்றது. ஆண்ட அரசனுக்கும் இனி ஆளவரும் அரசனுக்கும் இடை நின்ற காலம் உள்ளபடியே வருத்தந்தரும் காலம். அத்தகைய காலம்போல் துன்பஞ் செய்யும் காலம் என்று உவமித்து கூறுவது எத்துணைப் பொருத்தமுடையதாக இலங்கு கின்றது.

"வெல்புகழ் மன்னவன் விளங்கிய ஒழுக்கத்தால்
நல்லாற்றின் உயிர்காத்து நடுக்கறத் தான்செய்த
தொல்வினைப் பயன்துய்ப்பத் துறக்கம்வேட் டெழுந்தாற்
பல்கதிர் ஞாயிறு பகலாற்றி மலைசேர [போல்
ஆனாது கலுழ்கொண்ட உலகத்து மற்றவன்
ஏனையான் அளிப்பான் போல்இகல் இருள் மதிசீப்பக்
குடைநிழல் ஆண்டாற்கும் ஆளிய வருவாற்கும்
இடைநின்ற காலம்போல் இறுத்தந்த மருண்மாலை" (118)

அரசன் இன்மையால் அமையாது கலக்கம்கொண்ட உலகம்போல காதலியின் உள்ளமும் கலங்கியுள்ளது என் பதைக் கருத்தாகக் கொள்ள வேண்டும்.

ஒரு பெண் தன் காதலனோடு புறம் போனாள் என் றறிந்தாள் செவிலித்தாய். அவள் அவர்களுடைய போக் கினை அறியப் புறப்பட்டாள். எதிர்ப்பட்ட அந்தணரை உசாவுகின்றாள். அவர்கள் காதலர்களைக் கண்டதை மறக்கவில்லை; மறைக்கவுமில்லை. பெண்கள் பிறந்த

இடத்திற்குரியவர்கள் அல்லர், புகுந்த இடஞ்சிறக்க இருப்பவர்கள் என்பதை நயமாகவும் திறமாகவும் எடுத்துரைக்கின்றனர்.

"பலவுறு நறுஞ் சாந்தம் படுப்பவர்க் கல்லதை
மலையுளே பிறப்பினும் மலைக்கவைதாம் என்செயும்
நினையுங்கால் நும்மகள் நுமக்குமாங்கு அனையளே!' (9)

அம்மா! சந்தன மரம் மலையில் தோன்றி வளர்கின்றது. அதனால் மலைக்கு என்ன பயன்? அதனை எடுத்துக் குழைத்துப் பூசிக் கொள்பவர்களுக்குத்தானே பயன்படுகின்றது. இதனை நினைத்துப் பார்க்கும்போது உனது மகளும் உனக்கு அப்படிப்பட்டவளே.

"சீர்கெழு வெண்முத்தம் அணிபவர்க் கல்லதை
நீருளே பிறப்பினும் நீர்க்கவைதான் என்செயும்
தேருங்கால் நும்மகள் நுமக்குமாங்கு அனையளே" (9)

வெண்முத்துக்கள் கடலில் பிறக்கின்றன. அவற்றை அணிபவர்க்கு அன்றி அவற்றால் கடலுக்கு என்ன பயன்? தேர்ந்து பார்க்கின்றபோது உனது மகளும் உனக்கு அப்படிப்பட்டவளே.

"ஏழ்புணர் இன்னிசை முரல்பவர்க் கல்லதை
யாழுளே பிறப்பினும் யாழ்க்கவைதாம் என்செயும்
சூழுங்கால் நும்மகள் நுமக்குமாங்கு அனையளே!" (9)

இசை யாழில் பிறக்கின்றது. எனினும் அதனால் யாழுக்கு என்ன பயன்? இசைப்பவர்க்குத்தானே அது பயன்படுகின்றது. ஆராய்ந்து பார். உனது மகளும் உனக்கு அப்படிப்பட்டவளே.

பொருள் தேடுவதற்காக கணவன் மனைவியைப் பிரிந்து சென்றான். போகின்ற வழி காட்டு வழி, அது கடத்தற்கு அருமையுடையது, என்று சொல்லி மனை

வியை மனையிலிருத்தி அவன் புறப்பட்டான். அவன் வரவு நோக்கிய அம்மங்கை நல்லாள் வழிமேல் விழிவைத்துப் பார்த்த வண்ணமாக இருக்கின்றாள். காட்டிலேயுள்ள யானையைப் புருவைமானை அவள் மனக்கண்முன் தோற்று விக்கிறாள். அவர் என்ன சொல்லிச் சென்றார் ?

"துடியடிக் கயந்தலை கலக்கிய சின்னீரைப்
பிடியூட்டிப் பின்னுண்ணும் களிறெனவு முரைத்தனரே"

காட்டிலே சிறியதொரு நீர்த்தேக்கம். யானைக்குட்டிகள் அத்தேக்கத்தைக் கலக்கியபின் என்ன மிஞ்சும்? அரிதாயிருக்கின்ற நீரை ஆண் யானை பெண்யானைக்கு ஊட்டிய பின்தான் உண்ணுமாம். அத்தகைய அருள் உணர்ச்சி!

"அன்புகொள் மடப்பெடை அசைஇய வருத்தத்தை
மென்சிறக ராலாற்றும் புறவெனவும் உரைத்தனரே" (11)

பெடை வெப்பம் தாங்காமல் வருந்துகின்றது. ஆண் புறு தன் மென்மையான சிறகால் பெடையின் வருத்தத்தைப் போக்குகின்றது.

"இன்னிழல் இன்மையால் வருந்திய மடப்பிணைக்குத்
தன்னிழல் கொடுத்தளிக்கும் கலையெனவும் உரைத்தனரே"

நிழலின்மையால் பெண்மான் வருந்தி நிற்க ஆண் மான் தன்னிழலில் அதனை அமர்த்திக் கொள்கின்றது.

இவ்வாறெல்லாம் தன் கணவர் உரைத்தவழி எண்ணி எண்ணி அவள் தன்னைத் தேற்றிக் கொள்கிறாள்.

இன்பக்காட்சிகளும் இனிய உரையாடல்களும் எழில் நிறைந்த கருத்துக்களின் வரையறைத்திட்பமும் உடைய கலித்தொகை ஒரு கருவூலம். ஊன்றி உணர்வார்க்கு கலித்தொகை கலைத்தொகையாகவும் பெரும் பயன் சுரக்கும்.

மெய்யான விமர்சனம்

பழந் தமிழகத்தில் ஒருவகை விமர்சனம் வழக்கில் இருந்தது. அதனை அரங்கேற்றம் என்றனர். மதுரையில் அறிஞர் அவைக்களத்தில் சங்க இலக்கியங்கள் ஆராயப் பெற்று விளக்கம் பெற்றன. தமிழையே கூடலில் ஆராய்ந்தார்கள். "உயர் மதிக் கூடலில் ஆய்ந்த ஒண்தீந் தமிழ்" என்பர் மாணிக்கவாசகர்.

"பழுதில் கொள்கை வழுதியர் அவைக்கண்
அறிவு வீற்றிருந்த செறிவுடை மனத்து
வான்றோய் நல்லிசைச் சான்றோர் குழீஇ
அருந்தமிழ் மூன்றும் தெரிந்த காலை"

என்று அகநானூற்று உரைப் பாயிரம் உரைக்கின்றது.

திருக்குறள் அரங்கேற்றத்திற்கு எடுத்துவரப்பெற்றதாகச் செய்தி உண்டு. மதுரைச் சொக்கப்பெருமான் முன்னிலையில் பாண்டிய அரசன் அமைச்சர் ஆகியோர் புடைசூழ, சங்கத்தார் நெஞ்சில் திகிலேறவும் ஏனையர் நெஞ்சில் களிப்பேறவும் திருவள்ளுவர் திருக்குறளை அரங்கேற்றினராம். அந்த அளவில்கூட புலவர்கள் அதனைப் பூரணமாக ஒப்புக்கொண்டதாகத் தெரியவில்லை. "நீர் பாடிய குறளை நாங்கள் ஒப்புக்கொள்வதற்கு ஐயம் ஒன்றுளது. அது யாதெனில், நாங்கள் இருக்கும் இந்த சங்கப் பலகை தெள்ளிய செந்தமிழ் நூல்களைக் கண்டால் இடங் கொடுக்கும். ஆதலால், இது ஒப்புக்கொள்ளுமாகில் எங்களுக்கெல்லாம் சம்மதம்" என்று அவர்கள் கூறினர்களாம். திருவள்ளுவர் திருக்குறளைச் சங்கப் பலகையில் வைக்க அப்பலகை தன்னிடத்திருந்த சங்கத்தார் பொற்றாமரைக் குளத்தில் விழும்படி திருக்குறள் சுவடியின் அளவாகச் சுருங்கி அதற்கு மட்டும் இடம் கொடுத்ததாம்.

குளத்தில் வீழ்ந்து தடுமாறி வெளியேறிய புலவர் பெரு மக்களால் கூறப்பட்ட புகழுரையே 'திருவள்ளுவமாலை' என்பர்.

இதைப் போலவே கம்பர், வில்லிப்புத்தூரார், ஒட்டக் கூத்தர், புகழேந்தியார் முதலிய புலவர்கள் இயற்றிய நூல்களையும் அரங்கேற்றிய கதைகள் அழகாகப் புனைந் துரைக்கப்பெற்றிருக்கின்றன. இவற்றின் உள்ளீடாக நாம் காணத்தகுவது நூலோர் தங்கள் நூல்களுக்கு அறிஞர் அபிப்பிராயம் கூறவேண்டும் என்பதில் அவர்களுக்கிருந்த மாறாத ஆசை. மதிப்பிடுகின்ற முறையில் விபரீதமும் விநோதமும் தோன்றினும் அறிஞர்களின் கருத்துரையைப் பெறவேண்டும் என்பதிலும் அக்கருத்துரையை வழங்குவ தற்குப் புலவர்கள் பரிசீலனை வேண்டும் என்பதிலும் நல்ல அம்சங்களைக் காணலாம். அந்நாளில் நூல்கள் ஏட்டள வில் இருந்தன. வாசகர்கள் சுருங்கிய அளவில் இருந் தார்கள். அரங்கேற்றத்தில் ஒப்புக்கொள்ளப்பெறாத நூல்கள் நாட்டில் தலைகாட்டுதற்கு இடமில்லாது போயிற்று.

அச்சு வசதியின் காரணமாக நூல்கள் பெருகிய அளவில் வெளிவர வழியுண்டாயிற்று. வாசகர்களின் கூட்டமும் விரிவடைந்தது. வெள்ளத்தின் பெருக்கைப் போல கலைப் பெருக்கும் கவிப் பெருக்கும் மேவ, இயந்திர சாதனம் பெருந் துணைபுரிய புதிய புதிய வெளியீடுகள் விரைந்து தோன்றுகின்றன. இவற்றை நடுநிலைமையோடு ஆய்ந்து கூறும் விமர்சகரின் பொறுப்புக்களும் கடமை களும் அதிகம் ஆகின்றன.

விமர்சனம் என்பது மதிப்புரை என்றும் வழங்கு கின்றது. மதிப்புரை என்னும்போது நூல்களைப்பற்றி

மதிப்பாக மேன்மையாகப் புகழ்ச்சியாகக் கூறுதல் என்று சில மதிப்புரையாளர் கருதுகின்றனர் என்று எண்ண இடம் ஏற்படுகின்றது.

ஒரு இலக்கியப் பத்திரிகையில் ஒரு நூலைப்பற்றி வெளியிடப்பெற்ற மதிப்புரையைக் கவனித்துப் பாருங்கள். "..........என்னும் இச்சிறந்த நூலை யாம் மிக்க பெரு மிதத்துடனும் உவகையுடனும் வரவேற்கின்றோம். இத்தகைய நூல் ஒன்றை வெளிக்கொரை வேண்டும் என்பது எம் பேரவாவாயிருந்தது. எம் முயற்சியின்றி இந்நூல் வெளிவந்தது எதிர்பாராத பெருமகிழ்ச்சியை எமக்கு உண்டாக்கிற்று. திரு...........அவர்களுக்கு யாம் எத்தகைய நன்றி பாராட்ட வல்லேம் ? திரு........அவர்கள் செய்துள்ள உதவி ஞாலத்தில் மாணப் பெரிது. அவர் மாட்டு என்னுற்றுங் கொல்லோ தமிழ் உலகு ?"

மதிப்புரை என்ற பெயரோடு வெளிவந்துள்ள இவ் வுரை குறித்த நூலைப் பல முறை வலம் வந்து கூறும் வணக்க உரையாகத் தென்படுகின்றது. இந்தமாதிரி மதிப் புரையைப் படிக்கும்போது இது மதிப்பிட்டு உரைக்கின்ற உரையா அல்லது மதிப்பாக உரைகின்ற உரையா என்றே கேட்கத் தோன்றும். மதிப்புரை என்றால் நூலைப் படித்துப் பார்த்து அனுபவித்து மதிப்பிட்டு உரைக்க வேண்டும். காய்தல் உவத்தல் இன்றி நடுநிலைமையோடு ஆய்ந்து ஆராய்ந்து அதன் குற்ற நற்றங்களை எடுத் துரைக்க வேண்டும். முழுமையும் மதிப்பாக, முற்றிலும் புகழ்ச்சியாக, புகழ்ச்சியின்றி வேறில்லையாக உரைப் பதைப் புகழுரை என்போம். அது மதிப்புரை ஆகவே ஆகாது.

சன்மார்க்கத்தில் கடைப்பிடிக்கவேண்டிய நீதி நெறியை விமர்சனத் துறையில் வெகு நுணுக்கமாக மேற் கொள்வார்போல மதிப்புரையாளர் நூலாசிரியரின் 'சீரெல் லாம் தூற்றிச் சிறுமை புறங்காக்க' முயல்வது இடங் கடந்த செயலாக இடர் விளைக்கும். நூலில் குற்றமுள தேல் குற்றம் என்று கூறுவதில் மதிப்புரையாளர்க்கு நக்கிரத் துணிவு வேண்டும்.

முன்னர்க் குறிப்பிட்ட அதே நூலைப்பற்றி அதே இலக்கியப் பத்திரிகையில் பிறிதொரு மதிப்புரை நடுநிலையி லிருந்து ஆய்ந்து வெளியிடப்படும் மதிப்புரைக்கு எடுத்துக் காட்டாக விளங்குகின்றது. மதிப்புரையாளர் அதில் நூலின் சிறப்பியல்புகளை உதாரணத்துடன் நிறுவுகின்றார். குற்றங் குறைகளையும் காரணத்துடன் காட்டுகின்றார்.

அம்மதிப்புரையில் சில பகுதிகள்: "சிறப்பாகச் சொல் திரிபுகளுக்குரிய பல்வகைப் பெயர்களும் பொருள் திரிவின் பல்வகைப் பிரிவுகளுடைய பெயர்களும் அழகாக அமைத் துக் காட்டப்பட்டுள்ளன".

"தொல்காப்பிய வழுக்கள் என்று இவ்வாசிரியர் சில வற்றைப் பக்கம் 73 முதல் 83 வரை காட்டுகின்றார். அவை பெரும்பாலும் வாதத்திற்குரிய செய்திகள்."

"சொற்கள் தோன்றிய பிறவகைகள் என்னும் ஓர் உள்தலைப்பின் கீழ்க் காட்டப்படும் உதாரணங்களுள் குட்டி என்பது ஆட்டுக் குட்டி என்பதன் முதற்குறை என்றும், கோ என்பது கோன் என்பதன் கடைக் குறை என்றும், யாய், நாய் தாய் என்பன எம்மாய், நும்மாய், தம்மாய் என்பனவற்றின் சிதைவு என்றும் குறிக்கப்பட் டுள. இவை பொருத்தமுடையன என எனக்குத் தோன்ற வில்லை. ஆயினும், இவ்வாசிரியர் காட்டும் பிற பல

உதாரணங்கள் பிறிதோரிடத்திலும் உள்ளன. பெரும்பாலும் மொழிநூற்கலை அறிஞர்களால் ஏற்றுக்கொள்ளத் தக்கனவாக உள்ளன.''

விமர்சனம் அல்லது மதிப்புரை நூல்களின் திறன் ஆய்ந்து தெளிகின்றதில் அடங்கியிருக்கின்றது என்பதை இத்தகைய மதிப்புரைகள் கொண்டே அறிந்துகொள்ளக் கூடும்.

விமர்சனத்தை வெறும் ரசனையாக மாற்றல் பெருங் குற்றம். ரசித்தல் மதிப்பிடுதல் என்பன இரண்டும் இயைந்தே விமர்சனம் ஆகின்றது என்பதை மறுத்தற்கில்லை. மதிப்பிடுதலைவிட ரசித்தலே முந்தியதும் முக்கியமானதுமான பண்பு என்பதும் உண்மையே. என்றாலும் வெறும் ரசித்தலின் பெயரால் எத்தனை விமர்சனங்கள் பாழ்படுகின்றன. சில அலாதி ரசிக விமர்சகர்களுக்கு எந்த நூலானாலும் அது சிறந்த அருமையான நூலே. அந்நூலின் எந்தப் பகுதியும் சிறந்த அருமையான பகுதியே. எந்தக் கவிதைத் தொகுதியானாலும் இனிய அழகிய கவிதைத் தொகுதியே. அத்தொகுதியின் எந்தப் பகுதியும் இனிய அழகிய கவிதையே. இது போலிச் சுவையுணர்ச்சியால் எழுகின்ற பொய்யான புனைந்துரை விமர்சனம். கருத்துலகிலேயும் கலையுலகிலேயும் படித்தரங்கள் உண்டு என்று அறியக்கூடாதார், கவிச்சுவையின் மர்மத்தை ஆழ்ந்து நுகரும் மதுகையில்லாதார், நூல் உலகில் பார்க்கும் இடம் எல்லாம் நீக்கமற இனிய சுவையையே நுகர்ந்து அழகிலேயே சொக்கித் தம்மையும் மறந்து ரசிப்பதில் வியப்பொன்றுமில்லை.

நூலில் இனிமைச் சுவையோடு பிற சுவைகளையும் தேரவேண்டும். சுவையற்ற இடங்களையும் அறிய

வேண்டும். கவி நயங்களையும் கருத்து நயங்களையும் கண்டு மகிழ்வது விமர்சனத்தில் ஒரு பகுதியே. நூலின் பிற நலன்களை வகைப்படுத்திக் காணுதல், சரித்திரத் துணை கொண்டு காலவரையறையோடு துருவி ஆய்தல், இவை முதலிய விமர்சனத்தின் வேறு பகுதிகளும் உண்டு. இவை அனைத்தும் சேர்ந்து அநுபவத்திற்கிடமாகி நூலின் தகுதி நோக்கமும் தராதரக் காட்சியும் கிட்டும்போது விமர்சனம் நிறைவு பெற்றதாகும்.

நிறைவுபெற்ற விமர்சனத்திற்கு விமர்சகரிடம் சில தகுதிகள் இருத்தல் வேண்டும். முதற்கண் வேண்டுவது பொறுப்பு உணர்ச்சி. விமர்சனப் பணி பொதுநலப் பணி. விமர்சகர் பொதுமக்களின் பிரதிநிதி. இந்நிலையில் அவர் தன் கடமையை ஆற்றவேண்டும். நூலாசிரியரின் தயவு தாட்சண்யத்தை லட்சியம் செய்யாது பொதுமக்களிடை விமர்சனத்தால் ஏற்படும் விளைவை முன்னிறுத்தினால் தான் இந்த மக்கட் பொறுப்புடன் பணியை நிறை வேற்ற இயலும்.

கண்ணாடி களங்கமற்றதாக இருந்தால் அதில் காணப் படும் பொருளும் தெளிவுறத் தோன்றும். அதுவே போல விமர்சகர் களங்கமற்ற நடுநிலையாளராக இருந்தால் அவர் மதிப்பிட்டு உரைக்கும் நூலின் தன்மையையும் நாம் தெளிய அறியலாம். விமர்சகர் எந்த வகையான நூலை விமர்சனம் செய்கின்றாரோ அந்த வகையான நூலில் தேர்ச்சி பெற்றிருத்தல் அவசியம். உயர்ந்த சஞ்சிகை களில் விமர்சனப் பகுதியில் வேறுவேறு கலையில் தேர்ச்சி பெற்ற வித்தகர்கள் தொண்டாற்றுகின்றார்கள். அவ்வக் கலையில் தேர்ந்த அறிஞர்களாலேயே அவ்வக் கலைநூல் விமர்சனம் செய்யப்படுகின்றது.

விமர்சனம் தராசுக்கோல் போல அமையவேண்டிய தொன்று. ஒருபால் கோடாத சான்றோரே அப்பணியினை மேற்கொள்ளுந் தகுதியினர். அன்னவர் விமர்சனம் செய்தால் விமர்சனம் விளங்கும். அவர் சார்புபற்றி வானளாவ வாழ்த்தார். தொடர்பின்மைபற்றிக் குறைத்து உரையார்.

"சிறந்த நூல்" "எளிய இனிய நடை" "உயரிய கருத்துக்கள்" "கண்ணைக் கவரும் கவர்ச்சி எழில் வீசும் பதிப்பு" என்ற வழக்கமான சொற்றொடர்களைக் கொண்டு வழிவழியாக மதிப்புரை செய்யவும் காண் கிறோம். இம்முடிபுகளை விவரித்துக் காரணம் கூறுமலும் எடுத்துக்காட்டுக்களுடன் விளக்காமலும் விட்டிருந்தால் இந்த வகை விமர்சனம் புத்தகத்தைப் படித்தல்ல–பார்த்து, பெரும்பாலும் புரட்டிப் பார்த்து, எழுதப்பெற்றிருக் கின்றது என்று முடிவுகட்டலாம்.

இத்தகைய மதிப்பீட்டில் சில்லரை மதிப்பும் உண்டு. மொத்த மதிப்பும் உண்டு. மொத்த மதிப்பு அநேகமாகக் குத்துமதிப்பாக இருக்கும். குத்துமதிப்பு என்றால் தெரி கிறதல்லவா ? உத்தேசமான மதிப்பு. "மொத்தத்தில் இந்த நூல் ஒரு சிறந்த இலக்கிய விருந்து என்பதில் தடை யில்லை." இது புத்தகத்தைப் படிக்காமலும் பாராமலும், புரட்டிப் பாராமலும் யூகமாகச் சொல்லக்கூடிய மதிப் புரை என்பதில் இழுக்கில்லை.

"இந்நூல் மொழிப்பற்றுடையார் ஒவ்வொருவ ரிடத்தும் அவசியம் இருக்கவேண்டிய நூல்" என்ற அளவில் இரத்தினச் சுருக்கமாக எழுதப்படுகின்ற மதிப் புரை உண்டு. இது விமர்சன எல்லையைத் தாண்டி விளம்பர வட்டாரத்தில் அகப்பட்டுக்கொண்டு அம்பலப் படும் மதிப்புரை.

"இந்நூலில் பக்திச் சுவையே பிரதானமாக ஓடிக் கொண்டிருப்பதால் இதனை இலக்கியத்துறையில் இலக்கிய முறையில் விமர்சனம் செய்வதற்கில்லை" இது கவிதை நூலைப்பற்றிய ஒரு விமர்சனம். விமர்சனப் பெரும் பணியைப் பொறுப்புவாய்ந் நல்ல பணியைத் தட்டிக்கழிக்க ஒரு வசதியான சாக்குப்போக்கு இது. பக்திச் சுவையை அடிப்படையாகக்கொண்ட நூல் பக்தி இலக்கியமாக விமர்சனம் செய்யப்படுவதில், திறன் ஆய்ந்து தெளிவு நாடப் பெறுவதில் தடையிருக்க நியாயமில்லை. தமிழையே பக்தியின் மொழி என்றல்லவா மொழிநூல் அறிஞர்கள் தெரிந்துரைத்திருக்கின்றார்கள்? இந்நிலையில் பக்தியே பிரதானமாக ஓடிக்கொண்டிருக்கிற நூலை, அவசரப்படாமல் ஓடுகின்ற ஓட்டத்தில் மதிப்புரைக்காமல், நிதானமாக எண்ணி நன்காராய்ந்து நல்ல வண்ணம் விமர்சனம் செய்யலாம் அன்றோ?

சுடர்விளக்காயினும் தூண்டுகோல்வேண்டும். கலைத் துறையில் தூண்டுகோலாக விளங்குவது விமர்சனம். அறிஞர்களின் நூல்களைத் தக்கமுறையில் மதிப்பிட்டு அவற்றைப் பொதுமக்களுக்கு அறிமுகப்படுத்துபவர் விமர்சகர். பொதுமக்களின் மனநிலையை அறிஞர்க்கு எடுத்துரைத்து மக்களின் பக்குவத்திற்கேற்ற நூல்கள் வெளிவருவதற்கு வழி அமைப்பவர் விமர்சகர். இந்நிலையில் ஆசிரியர்க்கும் வாசகர்க்கும் இடைநின்று நூலறிவு நாடெங்கும் பரப்பும் நல்ல தொழில் செய்பவர் விமர்சகர்.

தமிழில் நூல்களை மதிப்பிடுங் கலை இன்னும் வளர்தல் வேண்டும். ஏராளமான நூல்கள் வெளியிடப்படுகின்ற காரணத்தால் புத்தக விலையும் பதிப்பின் பொலிவும், கிடைக்கும் இடமுமே குறித்தல் மதிப்பிடும் கலைவளர்ச்சி

அடைந்துள்ளது என்பதற்குரிய அறிகுறி ஆகாது. ஒரு சில நூல்களையேனும் செவ்விய முறையில் ஆராய்ந்து விமர்சனம் செய்வதைக் குறிப்பாக இலக்கியப் பத்திரிகைகள் மேற்கொள்ளுதல் தகும். மொழியின் சிறப்பெல்லாம் மொழி பயில்வோர் சிறப்பே. ஆதலின் விமர்சகரும், படிப்போர் தேவையையும் திறத்தையும் தகுதியையும் முன்னிறுத்தி அவர்களுடைய மெய்யான பிரதிநிதிகளாக பொய்புனைவில்லாத விமர்சனம் செய்தல்வேண்டும்.

கல் வெட்டுக்கள்

அன்று எழுதிய எழுத்துக்களை அழித்து எழுத வேண்டாதபடி என்றும் விளங்கவேண்டும் என்ற நன்னோக்கங்கொண்டு எழுதப்பெற்ற எழுத்துக்களே கல்வெட்டு எழுத்துக்கள் சாசனங்கள் என்றும் சிலாலேகை என்றும் சிறப்பிக்கப்படும். இவைகளிற் பல பிற நாட்டு நல்லறிஞர்களின் பேருழைப்பாலும் நம்மவர்களின் நல் முயற்சியாலும் சாகா நலம்பெற்றுத் திகழ்கின்றன. போரில் புறங்கொடாது பேராண்மை நிறுவிய தறுகண் மறவரின் பெயரையும் பெருமையையும் ஏட்டில் எழுதினுல் மட்டும் போதுமா? பாட்டில் காட்டினுல் மட்டும் பற்றுமா? வழிவழி வரும் மக்களும் கண்ணுரக் கண்டு மகிழும்படி சிலையில் பொறித்து நிலைபெற வைத்தல் வேண்டும். இந்த உயர் எண்ணத்தின் விளைவாக ஏற்பட்டவைதாம் நடுகற்கள். இவற்றின் தொடர்பாக வந்த சாசனங்கள், அரசர், குறுநில மன்னரின் அறச் செயல்கள் அவர்தம் உடன்படிக்கைகள், பழம் புலவர் செய்திகள், மண்டலம் வளநாடு கூற்றம் என்பனவற்றின்வரலாறுகள்,

முற்காலப் பழக்கவழக்கங்கள், சமய சம்பிரதாயங்கள் மாமூல்கள் ஆகியவற்றைத் தெரிவிக்கும் சரித்திரக் கூறுகள்.

தென் இந்தியச் சாசனங்கள் மொழி வகையாகப் பகுக்கப்படும்போது அவை தமிழ், பிராகிருதம் சமஸ்கிருதம் என்ற பிரிவுள் அமையும். தமிழ் வகையில் முன்னும் பின்னும் சமஸ்கிருத வசனமோ தொடரோ கலந்துவரக் காண்கின்றோம். லிபி வகையிலே முக்கியமாகக் குறிப்பிடத் தகுந்தவை வட்டெழுத்து, கிரந்த எழுத்து, பிராமி எழுத்து, தமிழ் எழுத்து.

மிகவும் புராதன காலத்துக் கல்வெட்டுக்களில் காணப்பெறும் எழுத்துக்கள் வட்டெழுத்துக்கள். இவையே ஆதித்தமிழ் எழுத்துக்களாகவேண்டும். கண்ணெழுத்தெனவும் கோலெழுத்தெனவும் பெயர் பெறுபவை இவையே. தெக்கன், மலேயாளம், நானமோனம் என்பனவும் வட்டெழுத்துக்களின் வேறு பெயர்களாகச் சொல்லப்பெறும். வளைந்த கோடுகளை அதிகமாகப்பெற்ற காரணத்தினலேயே இவற்றிற்கு வட்டெழுத்துக்கள் எனப் பெயர் ஏற்படலாயிற்று. இவ்வெழுத்துக்கள் ஏறத்தாழ கி. பி. 1400-க்குப்பின் வழக்கொழியத் தலைப்பட்டன. கி. பி. 1387-ம் ஆண்டில் பராக்கிரம பாண்டியன் திருக்குற்றலத்துக் கோவில் கர்ப்பக் கிருகத்தைப் புதுப்பித்தான். அப்பொழுது அதன் சுவர்களிலிருந்த சாசனத்தைத் தனியாகப் பெயர்த்தெழுதிக்கொண்டு கட்டடம் முடிந்த பிறகு மறுபடியும் அச்சாசனத்தைப்பொறித்தான். இதைப் பற்றிய ஒரு கல்வெட்டில் காணும் குறிப்பு வருமாறு :— “திருமலைஜீ$^{ண}_{ண}$ருக்கை (யால் உத்தா ?) ரணம் பண்ணி னடத்து திருமலையில் கல்வெட்டு வட்டமாகையினல் தமிழாக படியெடுத்துக் கல்வட்............”

"வட்டமாகையினுல் தமிழாகப் படியெடுத்து" எனும் வாசகம் பழங்காலத்தில் தமிழ் எழுத்தே வழக்கிலிருந்த தென்பதையும், பின்னர் அது புரிந்துகொள்ளக்கூடாதபடி போனதென்பதையும் தமிழாக எழுதவேண்டிய தேவை ஏற்பட்டதென்பதையும் நன்கு புலப்படுத்தும்.

கிடைத்துள்ள வட்டெழுத்துச் சாசனங்களில் மிகவும் தொன்மை வாய்ந்தது கி.பி 8-ம் நூற்றுண்டின் பிற்பகுதிக் காலத்தது. பாண்டி நாட்டில் கி.பி. 11-ம் நூற்றுண்டுக்கு முந்திய கல் வெட்டுக்கள் யாவும் வட்டெழுத்துக்களி லேயே உள்ளன. இவ்வட்டெழுத்துக்களிலேயும் பழங் கால வட்டெழுத்துக்கள், மத்தியகால எழுத்துக்கள் பிற் கால எழுத்துக்கள் என்ற மூவகை உண்டு. இவை நாளடைவில் மலையாள எழுத்துக்களின் இயல்பைப் பெற்றுவிட்டன.

கல்வெட்டு எழுத்துக்களில் இரண்டாவது வகை கிரந்த எழுத்துக்கள். கிரந்தம் என்பது வடமொழியில் நூலைக் குறிக்கும். வடமொழி வசனத்தைத் தமிழில் எழுதிக்காட்டப் பழங்காலத்தில் பயன்படுத்திய எழுத்தே கிரந்த எழுத்தாகும். இது ஒரு காலத்தில் தென்னுடு முழுமையும் வியாபித்திருந்தது. வேதாந்த தேசிகர் போன்ற இருமொழிப் புலமையாளர் எழுதிய சில நூல்களில் கிரந்த எழுத்தே காணப்பெறும்.

வடமொழிக்கு இப்போது இருக்கும் தேவநாகரி எழுத்து விஜயநகர அரசர்கள் காலத்திலிருந்துதான் நம் நாட்டில் பிரபலம் பெற்றதென்பர். தேவநாகரி நுழைவி ஞல் பழைய கிரந்தம் பாதிக்கப்படவில்லை, ஆனுல் தமிழ் நாட்டுக்கு வந்த மகாராஷ்டிரருடன் நிலைமை மாறியது.

அவர்கள் தேவநாகரி எழுத்தையே பேணிப் பயின்றனர். எனவே கிரந்த எழுத்து வழக்கிலிருந்து விலகலாயிற்று.

சாசன எழுத்துக்களின் மூன்ருவது வகை பிராமி எழுத்துக்கள். இந்துக்களைப்போலவே ஜைனர், பௌத்தர் முதலிய பலரும் எழுத்துக்கள் பிரம்மாவினுல் படைக்கப் பெற்றவை என்று கருதியவர்கள் என்று காட்ட விரும் புஞ் சிலர் பிரம்மாவுக்கும் பிரம்மலிபிக்கும் தொடர்பு காட்டுகின்றனர். மதுரை திருநெல்வேலிப் பகுதிகளில் அசோக மன்னரின் பிராமி எழுத்துக்கள் காட்சியளிக் கின்றன.

கல்வெட்டு எழுத்தில் மூவகை இருந்து பின்னர் அவை முறைமை திரிந்து மலையாளத்தின் தன்மை அடைந் ததுபோலவே கிரந்த எழுத்துக்களிலும் பழைய கால எழுத்துக்கள், வரி வடிவம் வேறுபடும் காலத்து எழுத் துக்கள், தற்கால எழுத்துக்கள் என மூவகை நிலையில் மாற்றமும் தெளிவும் வளர்ச்சியும் நிரல்பட வந்தன. இதைப்போலவே பிராமிய எழுத்துக்களிலும் அவ்வப் போது ஏற்பட்ட மாற்றங்கள் பலப்பல.

ஒரே வகையான எழுத்துக்களிலேயும் சாசனத் திற்குச் சாசனம் அவற்றுள் திரிபும் மாற்றமும் தென்படு கின்றன. எழுத்துக்களை வெட்டுபவர்கள் அவைகள் கண்ணுக்கு அழகாக இருக்கவேண்டும் என்று எண்ணிய காரணமாகப் பல இடங்களில் எழுத்துக்களின் உரு வையே மாற்றிப் பொறித்திருக்கின்ருர்கள், உதாரண மாகக் காஞ்சிபுரத்துக் கைலாசநாதர் கோவில் சாசனம் காணலாம். இந்தச் சாசனம் மேற்பார்வைக்குப் பூக்களால் சித்தரிக்கப்பெற்றதாகத் தோன்றுமே தவிர மொழிக்கு முதற் காரணமான எழுத்துக் கோவையாகத் தோன்ருது.

உற்று நோக்கினுல்தான் பூக்களின் வடிவில் அமைந்த எழுத்துக்கள் புலப்படும்.

தமிழக வேந்தர்கள், குறுநில மன்னர்கள் காலத்தில் கல்வெட்டுக்கள் எண்ணெய் பூசிப் பாதுகாக்கப்பெற்றன. செப்புத் தகடுகளில் படியெடுக்கப்பட்டும் பாதுகாக்கப் பெற்றன. இவர்தம் மறைவுக்குப் பின் மக்கள் இவற்றின் அருமையை அறியாராயினர். கதிரவன் வெப்பத்தால் பொரிந்து பழுதுற்ற கல்வெட்டுக்கள் சிலவற்றில் எழுத் துக்கள் உருமாறித் தென்பட்டதில் வியப்பில்லை.

கல்வெட்டுக்களில் உரைநடையில் இயன்றனவும் உள. செய்யுளில் அமைந்தனவும் உள. உரையும் செய்யு ளும் விரவியனவும் உள.

ஆகப் பழமையான காலத்துக் கல்வெட்டாகக் கருதப்படும் திருநாதர் குன்றுக் கல்வெட்டு சுருங்கிய உரை நடையில் காணப்படுகின்றது. அச்சாசனத்தில் கண்ட கோணல் கீற்றுக்களைப் பெயர்த்தெழுதிய கோபி நாதராவ் மிகவும் சிரமப்பட்டு அக்கோணல் கீற்றுக்களில் பொருள்பேறுடைய குறியீட்டைக் கண்டிருக்கவேண்டும். 20 அங்குல நீளம் 15 அங்குலம் அகலமுள்ள ஒரு கல்லில் நல்ல முறையில் செதுக்கப்பட்ட இக்கல்வெட்டு மிகப் பழைய உரை நடைக்குரிய எடுத்துக்காட்டாக இன்றள வும் விளங்கி வருகின்றது.



திருநாதர் குன்று கல்வெட்டுக்கள்
(டி.ஏ. கோபிநாத் ராவ் அவர்கள் பார்த்து எழுதப்பட்டது)

ஐம்பத் தேழன
சனந் நோற்ற
சந்திர நந்திஆ
சிரிகர் நிசிதிகை

என்ற அச்சாசனம் சந்திரநந்தி எனும் ஜைன ஆசிரியர் 57 நாட்கள் உண்ணாவிரதமிருந்து உயிர்துறந்த செய்தியைத் தெரிவிக்கின்றது.

கல்வெட்டுக்களின் பொதுவான கட்டுக்கோப்பின் அம்சங்களாக முதல் முதலாக ஒரு மங்கல மொழியைக் காணலாம். இந்த மங்கல மொழி வடமொழியில் ஸ்வஸ்தி ஸ்ரீ, சுபமஸ்து, சுபமஸ்து ஸ்வஸ்திஸ்ரீ என்பனவற்றுள் ஒன்றாக இருக்கின்றது. குறிப்பாகப் பல்லவ காலத்துக் கல்வெட்டுக்கள் ஓம் நமச்சிவாய ஸ்வஸ்திஸ்ரீ எனத் தொடங்குகின்றன.

மங்கல மொழியை அடுத்து அக்கால அரசனது ஆற்றல் கூறப்படும். பின்னர் அறச்செயலும் அதைத் தொடர்ந்து அது எப்படிப் பாதுகாக்கப்படுகின்றதென்ற நிலையும் சொல்லப்படும். அறத்தின் பாதுகாவல் பற்றிக் கூறும் பகுதி காப்பு நிலையாகும். தொடக்கம் போலவே இறுதியிலும் ஒரு வடமொழி ஆசியோ ஒரு சுலோகமோ வரும்.

இந்த அம்சங்கள் சிலவற்றைக்கொண்ட ஒரு சாசனத்தைப் படித்துப் பார்ப்போம். மேலோட்டமாகப் பார்ப்பதில் பொருள் புரியாது. நடையும் சொல்லும் சொல்லும்வகையும் பழமையானவை. ஆங்கில இலக்கியத்தில் பழைய ஆங்கிலம்போலத் தமிழ் நடையில் இது ஒரு பழைய தமிழ் நடை. ஆங்கிலத்தில் ஒப்பந்தம் (Agreement), கிரயப்பத்திரம் (Sale deed) முதலியன எழுதும் வாசகம் போலவும், நமது கணக்கப்பிள்ளைகளின் பத்திரவாசகம் போலவும் அமைந்த நடை. இந்த நடையில் எழுத்துப் பிழையுடன் இலக்கணப் பிழையும் இருக்கும். ஆனல், வசனத்தின் நோக்கத்தில் எப்பிழையும் இராது. இதற்கொரு உதாரணம் தீக்காலி வல்லம் கோவில் சாசனம்.

ஸ்வஸ்திஸ்ரீ திருமண்டப மிழிச்சி யெடுப்பதற்கு முன்புள்ள சிலாலேகைப்படி கோவிஜய நந்தி விக்கிரம பந்மர்க்கு யாண்டு யஎ-வது படுவூர்க்கோட்டத்து மீயாறு நாட்டுத் தீக்காலிவல்லமுடைய பரமேஸ்வரர்க்கு இன்னுட்டு ஐம்பூணியும் விளத்தூரும் இத்தேவர் தேவதானம் அமருன்றி மங்கலமும் விடெல்விடுகு. விக்ரமாதித்தச் சதுர்வ்வேதி மங்கலமென்னும் பேரால் ஏகக்கிராம மகா மாவலி வாணராயனை விக்ரமாதித்த வானராயன் விண்ணப்பத்தாலும் காடுபட்டித் தமிழ்ப் பேரரயன் ஆணத்தியாலும் ஏகக்கிராமமாக்கி இவ்வமருன்றி மங்கலமுன்னித் தீக்காலிவல்லமுடைய பரமேஸ்வரர்க்குஇறுத்துவருகின்ற ஐ இரண்டாயிரக்காடியும் பொன்னிருபது கழஞ்சு மிவ்விடெல் விடுகு, விக்ரமாதித்தச் சதுர்வேதி மங்கலத்துச் சவையார் இறுப்பாராகவு மின்னெல்லில்த் திருவமிர்துக்கு நெல்லு அறுநூற்றுக் காடியும் திருவுண்ணுழிகை யுள்ளா

ராதித்துப் பாசரிக்கும் சிவப்ராஹ்மணர்க்கு நெல்லு ஐஞ் ஞூற்றுக்காடியும், திருப்பள்ளித் தாமம் பறிப்பார்க்கும் திருப்பதியம் பாடுவாறுள்ளிட்ட பலபணி செய்வார்க்கு நெல்லு நூற்றுக்காடியும் திரு நொந்தாவிளக்குக்கும் திரு மெய்ப்பூச்சுக்கும் சிதாரிக்கு மற்றும் கண்டஸ்புடித நவ கன்மாதிரிகளுக்குமாகப் பொன் இருபதின் கழஞ்சும் ஆக இந்நெல்லும் இப்பொன்னும் இத்தேவற்கு சந்த்ராதித் தவல்லிறுப்பார்களாகவும், இப்பரிசு நிவந்தமாகச் செய்து குடுத்தோம். இத்தர்மம் மங்மாஹேஸ்வரர் ரக்ஷை.

வடமொழிச் சுலோகத்தோடு முடியும் சாசனங்கள் சில. மகாவலி வாணராயர் சாசனத்தின் இறுதியில் காணப்படும் சுலோகம்.

பஹுபிர்: வஹுதா தத்தா ராஜபி: |
யஸ்ய யஸ்ய யதா பூமி: தஸ்ய தஸ்ய ததா பலம் ||

சகரன் முதலிய பல அரசர்களால் பூமி தானமாகக் கொடுக் கப்பட்டது: எவ்வெவனுக்கு பூமி எப்படியோ அவ்வவ னுக்கு அப்படியே அதன் பயன் என்பது இதன் பொருள். பல்லவருடைய கல்வெட்டு பெரும்பாலும் இந்த சுலோகத்துடன் முடிவு பெறுவது மரபு. சிவன் கோயில் சாசனமாயின் அது பங்மா ஹேஸ்வர ரக்ஷை என்றும், திருமால் கோயில் சாசனமாயின் அது வைஷ்ணவ ரக்ஷை என்றும் முடிவுறுவது காணலாம்.

பிற்காலத்திய சாசனங்களில் தர்மகர்த்தா பெருமை யும், தர்மத்தை அழிக்கின்றவர் அடையும் பழியையும் தவருது குறிப்பிட்டிருக்கிருர்கள்.

தர்மகர்த்தாக்கள் அடையும் பெருமைகளிற் சில "இத்தன்மம் நோக்குவான் ஸ்ரீபாதம் என் தலைமேலே"

எனவும், "இத்தன்மம் ரக்ஷித்தார் அடி என் முடிமேலே" எனவும் குறிக்கப்பெற்றுள்ளன. இத்தருமத்தைப் பாது காப்பவன் பாதங்களுக்கு என் வணக்கம் என்பது இவற்ருல் குறிக்கப்பெறுவது.

தர்மத்திற்கு விரோதம் செய்து அதனை அழிப்பவர்கள் அடையும் பாவங்கள் என்ற வரிசையில் "இதற்கு விரோதம் செய்தார் கெங்கையிடைக் குமரியிடைச் செய்தார் செய்த பாவங் கொள்வார்" எனவும், "இந்தத் தருமத்திற்கு அருதம் பண்ணினவன் உண்டாளுல் கங்கைக் கரையிலே கோவதையைக் கொன்ற பாவத்திலே போகக்கடவனுகவும்" எனவும் சில பழிபாவங்கள் காணப்படும்.

மெய்க்கீர்த்தி என்பது சாசனத்தின் ஒரு தனி அம்சம். சாசனங்களில் மெய்க்கீர்த்தி உள்ளனவும் இல்லனவும் உண்டு. மெய்க்கீர்த்தியிலும் தன் மெய்க்கீர்த்தி மட்டுமின்றித் தன் முன்னோர் மெய்க்கீர்த்தியும் உண்டு.

மெய்க்கீர்த்தி என்பது அரசனது புகழ் வரலாறுகளைக் கூறி அரசனை வாழ்த்தி அவன் இயற் பெயருடன் ஆட்சி வருடத்தைக் கூறும் பாடல் வகை.

மெய்க்கீர்த்தி இன்ன வகையில் அமையவேண்டும் என்பதற்குப் பன்னிரு பாட்டியல் இலக்கணமும் வகுத்துள்ளது.

சீர்நான் காகி யிரண்டடித் தொடையாய்
வேந்தன் மெய்ப்புகழ் எல்லாஞ் சொல்லியும்
அந்தத் தவன்வர லாறு சொல்லியும்
அவளுடன் வாழ்கெனச் சொல்லியும் மற்றவன்
இயற்பெயர்ப் பின்னர்ச் சிறக்க யாண்டெனத்
திறப்பட உரைப்பது சீர்மெய்க் கீர்த்தி.

இந்த இலக்கணத்திற்கு இலக்கியமாய் அமைந்த இராசராசனது மெய்க்கீர்த்தி ஒன்றைச் சொல்லிச் சாசன எழுத்து நடைபற்றிய இப்பேச்சை முடிக்கின்றேன்.

திருமகள் போலப் பெருநிலச் செல்வியுந்
தனக்கே யுரிமை பூண்டமை மனக்கொளக்
காந்தளூர்ச் சாலை கலமறுத் தருளி
வெங்கை நாடுங் கங்க பாடியுந்
தடிகை பாடியும் நுளம்ப பாடியும்
குடமலை நாடுங் கொல்லமுங் கலிங்கமும்
முரட்டொழிற் சிங்களர் ஈழமண் டலமும்
இரட்ட பாடி யேழரை யிலக்கமும்
முந்நீர்ப் பழந்தீவு பன்னீ ராயிரமும்
திண்டிறல் வென்றித் தண்டாற் கொண்டதன்
எழில்வள ரூழியுள் எல்லா யாண்டுந்
தொழுதக விளங்கும் யாண்டே செழியரைத்
தேசுகொள் கோராச கேசரி வர்மரான
உடையார்ஸ்ரீ ராசராச தேவர்க்கு யாண்டு.

வேளாங்கண்ணி

தஞ்சை மாவட்டத்தில் நாகபட்டினத்திற்குத் தெற்கே 4½ மைலுக்கு அப்பால் கடற்கரை ஓரமாய் அமைந்துள்ள ஒரு சிறு கிராமம் வேளாங்கண்ணி. இது வெள்ளையாறு எனப்படும் சிற்றுறு கடலொடு கலக்குமிடத்திற்கருகே இருக்கின்றது. இவ்விடம் ஒரு காலத்தில் புகழ்பெற்ற துறைமுகமாக இருந்திருக்கலாம். திரைகடலோடித் திரவியந்தேடிய வீர மாலுமிகளான போர்த்துகீசியர் கூட்டுறவால் செழிப்பான பட்டினமாகவும் மேலோங்கி இருக்கலாம் ஆனல், இன்று இதற்கு அரசாங்க ரீதியில் அந்தஸ்து

ஒன்றுமில்லை. வணிகத் துறையிலும் முக்கியத்துவமில்லை. இதனை ஒத்த பிற சிற்றூர்களில் உள்ள அளவிற்குக் கல்வி நிலையங்கள் இல்லை. பொதுநல ஸ்தாபனங்கள் இல்லை. கடற்கரை வழியாய் இவ்வூருக்குள் நுழைந்தால் இயற்கையின் கை வேலையாகிய கானற்சோலையைக் காண்போம். ஆங்காங்கே தென்னந் தோப்புக்கள்; நிரல் நிரலாக நெடும் பனைமரங்கள்; இவற்றிடையே மண்டிக்கிடக்கும் தாழ்ந்த குடிசைகள்; எங்கு நோக்கினும் பொன்னிறமான மண் பரப்பு; அலைவாய்க்கரையில் செம்படவர்களின் செல்வங்களாகிய கட்டு மரங்கள், மரக்கலங்கள், தோணிகள். பெரும்பாலும் ஏழைக் கடலோடிகள் வாழும் குப்பமாகிய இச் சிறு கிராமத்தில் என்ன இருக்கின்றது என்று நினைக்கத் தோன்றும் அத்தலத்திற்கு உயிரூட்டும் ஆரோக்கிய மாதாவின் அழகுவாய்ந்த ஆலயத்தைப் பார்க்கின்ற வரையில்.

வேளாங்கண்ணியின் மகிமையெல்லாம் அன்னையால் உண்டாகிய மகிமை. தேவதாயின் சகாயம் பெற்ற பல்லாயிரக்கணக்கான பக்தர்களின் விசுவாசம் அங்கே ஒரு பிரமாண்டமான கோயிலைக் கட்டியிருக்கின்றது. கண்ணையுங் கருத்தையும் கவரும் இந்த வண்ணத் திருக்கோவிலின் இன்றைய அமைப்பு 1910 முதல் 1932 வரை இவ்வூர்க் கட்டளைக் குருவாக உழைத்துவந்த சங்கைக்குரிய நொரோனு அடிகளின் அயராத முயற்சியினால் உருவானது. கோயிலுக்கு அண்மையில் திருயாத்திரைக்காரர்களுக்கென ஏற்பட்ட சத்திரஞ் சாவடிகளில் பெரும்பகுதி இந்த உத்தமகுருவின் ஆதீனத்தில் கட்டப்பெற்றது. அடிகள் கோயிலை விசாலப்படுத்தினர். குருக்கள் வதிய உறைவிடங்கள் அமைத்தனர். பெரிய தேர்க் கொட்டகையும் எழுப்பினர். கோயிலைச் சுற்றி மதில் சுவர் வளைத்தனர்.

இறைவனின் வழிகள் அற்புதமானவை என்பதற்கு இந்தப் புனிதப்பதி ஒரு கண்கண்ட சான்ருக விளங்கு கின்றது. தேவ அன்னை ஒரு சிறுவனுக்கு அருளிய காட்சியால் இச் க்ஷேத்திரம் தொடங்கியதாகச் சொல்லப் படும். பால்காரப் பையன் ஒருவன் நாள்தோறும் வேளாங்கண்ணியிலிருந்து நாகப்பட்டினத்திற்குப் பால் கொண்டுபோவது வழக்கம். ஒருநாள் அவன் புறப்படும் வழியில் வேளாங்கண்ணியை அடுத்த குளத்தங்கரையில் அமர்ந்தான். அலுப்பால் கண்ணயர்ந்து தூங்கினுன். அவனது நித்திரையில் ஓர் அழகிய மாது தன் கையில் ஒரு சிசுவோடு அவனுக்கு முன்னுல் நின்ருள். பையன் திடுக்கிட்டெழுந்தான். அருளும் எழிலும் உருவெடுத்து வந்த அம்மணியின் திருவதனத்தை அவன் இமைகொட் டாமல் பார்த்தான், பேச முயன்ருன். நா வெழவில்லே. வந்த அன்னே புன்னகை பூத்தாள். தன் குழந்தைக்குப் பால் வேண்டுமென்று அவள் மலர்க்கரம் நீட்டினுள். தான் கொண்டுவந்த பாத்திரத்தில் பால் உண்டு என்று இந்தப் பெண்மணிக்கு எப்படித் தெரியுமென்று அதிசயித் தான் சிறுவன். சரி, கொடுத்தால் அளவு குறைந்ததுபற்றி எஜமான் கோபித்துக்கொள்வார் என்ற தயக்கம். வாய் திறந்து கேட்ட வனிதைக்கு இல்லேயென்று எவ்வாறு சொல்வதென்று ஒரு ஏக்கம், எஜமானுக்குத் தக்க மறு மொழி கூறலாம் என்ற தைரியம் பிறந்தது. குழந்தை பருக பால் கொடுத்தான். அது பருகுவது கண்டு உளம் மகிழ்ந்தான். பட்டினஞ் செல்ல நேரமாகிவிட்டது. விரைந்து ஓடினுன். எஜமானிடம் தான் கொண்டுவந்த பால் குறைந்திருக்குஞ் செய்தியை உளறிச் சொல்லிக் கொண்டே பாத்திரத்தின் மூடியைத் திறந்தான். என்ன ஆச்சரியம்! பாத்திரத்தின் விளிம்பு தட்ட இருந்தது பால்.

நடந்தவற்றையெல்லாஞ் சொன்னுன், எஜமானனும் உடன்வந்து முன்பு சிறுவன் கண்ட அதே இடத்தில் மாதா வையும் சிசுவையும் காட்சியாகக் கண்டான். இந்த அதி சயச் சம்பவம் காட்டுத் தீயைப்போல் பரவிற்று. இதைக் கேட்டறிந்த நாகை நகரக் கிறிஸ்தவர்கள் இது அன்னை மரி தமது திருக் குமாரனேடு தந்த தரிசனம்தான் என்பதை யூகித்துத் தெரிந்துகொண்டனர். அன்று முதல் இக்காட்சி தோன்றிய இடத்திலுள்ள குளம் "மாதா குளம்" என்று அழைக்கப்பெற்றது. இன்றும் அக் குளத்திற்கு "மாதா குளம்" என்பதே பெயர். மாதா காட்சி தந்த பாவனை யாய்ச் சிற்பம் அமைந்த ஒரு சிறு கோயிலை இன்றும் அநேக பக்தர்கள் தரிசித்துப் போகின்ருர்கள்.

இன்னெரு அற்புத சம்பவம். வேளாங்கண்ணி யருகே ஒரு நத்தம். அதில் ஒரு அரசமரம். இதனடியில் பிரயாணிகள் தங்கிப் போவார்கள். யார் வந்தாலும் வராதே போனுலும் அங்கே ஒரு சப்பாணிப் பையனைப் பார்க்கலாம். அவன் ஒரு ஏழை விதவையின் ஏக புதல்வன், நாள்தோறும் காலையில் அவன் தாய் அவனையும் ஒரு பானை மோரையும் மரத்தடியில் வைத்துவிட்டுப்போவாள். பையன் கேட்பவர்க்கு மோர் வார்த்துப் பெற்ற காசைப் பத்திரப்படுத்திக்கொள்வான். ஒருநாள் யாரும் இல்லாத வேளை. திடீரென்று ஒரு மங்கை தோன்றினுள். அவள் கையகத்தே ஒருகுழந்தை. குழந்தைக்கு மோர் கேட்டாள். சப்பாணிச் சிறுவன் தடை சொல்லாது கொடுத்தாள் தோன்றிய தாய் சிறுவன் செய்த உதவியை மறக்கவில்லை, அவனுக்கு அவ்விடத்திலேயே பேருதவி செய்தாள். அவள் கையிலிருந்த தெய்வக் குழந்தையின் அருளால் நொண்டிப் பையனின் கால் சரியாயிற்று. இதனைப் பையன் இன்ன

மும் அறிந்துகொள்ளவில்லை. தோன்றிய அன்னை சொல்கின்றாள் :—

"தம்பி, நானும் என் மைந்தனும் இங்கே பிரசன்னமாயிருப்பதை நாகைவாழ் கிறிஸ்தவர்களிடம் போய்ச் சொல்வாயோ ?"

"அம்மணி! நீர் சொல்லியதைச் செய்ய என்னால் இயலாதே; நான் நொண்டி, எங்ஙனம் நடப்பேன் ?"

"மகனே நீ நடக்கலாம்; தேவசுதன் உன் காலைக் குணப்படுத்தி இருக்கின்றார்".

சிறுவன் இதைக் கேட்டதும் எழுந்தான். குணமடைந்தது கண்டான். ஆனந்தக் கூத்தாடினான். ஓடோடியும் போய் நாகை நகர்க் கிறிஸ்தவர்களுக்குத் தாய் குறித்த நற்செய்தியை நவின்றான். அக்கிறிஸ்தவர் கூட்டத்தில் ஒரு கனவான் முந்தியநாள் பரிசுத்த அன்னை தன் புதல்வன் சகிதம் தன் முன் நிற்பதாகக் கனாக் கண்டான். அதன் பொருள் என்னவென்று அவனுக்கு அப்போது புலனாகவில்லை. பையன் சொன்ன செய்தியைக் கேட்டதும் வேளாங்கண்ணிக்குப் புறப்பட்டான், சிறுவனோடு முழந்தாட்படியிட்டு ஜெபித்தான். கனவிற்கண்ட அன்னையின் உருவம் அவன்முன் வந்து நின்றது. காட்சியில் தோன்றிய அன்னை தன் பெயரால் அங்கே ஒரு கோயில் கட்டவேண்டும் என்று விருப்பந் தெரிவித்தாள். கன்னித் தாயின் விருப்பத்தைக் கட்டளையாகக் கொண்டான் அக் கனவான். ஒரு கோவிலைக் கட்டினான். அங்கு தேவ தாய் ஏசுவை ஏந்திய திருச்சுருபம் அமைத்து வைத்தான். அந்த இடத்திற்குக் கிறிஸ்தவர்கள் வந்து பிரார்த்தனை பண்ணினார்கள். பிற சமயத்தவர்களும் திரள் திரளாக வந்தார்கள். தேவ அன்னையின் உபகாரம் பெற்ற

யாத்திரிகர் கூட்டம் வரவரப் பெருகிற்று. அத்திருத் தலத்தின் பெருமையும் பரவத் தொடங்கிற்று. அன்னை தன்னை அண்டினோர்க்களித்த இகபர நன்மைகளின் காரண மாக அவளை "ஆரோக்கிய மாதா" என்று அழைக்க லாயினர்.

இத் திருத்தலத்தின் தொடர்பான மற்றொரு சம்பவம். போர்த்துக்கீசியக் கப்பல் ஒன்று மக்காவோ என்ற சீன நகரிலிருந்து இலங்கைக்குச் சரக்கேற்றிச் சென்றது. அது வங்காளக் குடாக்கடலுக்கு வந்தது. அந்தோ பெரும் புயல்! சண்டமாருதம்! ஆழியின் நடுவில் அகப்பட்ட மரக்கலம் அல்லோலகல்லோலப்பட்டது. மீகாமனும், மாலுமிகளும் திக்குமுக்காடித் திண்டாடினர். இனி மனித முயற்சியால் தப்பிக்க வழியில்லை என்று கண்டனர். தாங்கள் தேவ அன்னையின் உதவியால் ஆபத்தின்றி மீட்கப் பட்டால் மரக்கலம் சேர்ந்த துறையில் அந்த அன்னைக்கு ஒரு ஆலயம் எழுப்புவதாக நேர்ந்துகொண்டனர். அவர்க ளுடைய வேண்டுதல் வீண்போகவில்லை. சண்டமாருதம் சாந்தியானது. அலைகள் அமைந்தடங்கின. கப்பல் கரை சேர்ந்தது. அக்கப்பல் சேர்ந்த கரை வேளாங்கண்ணிக் கரை. சேர்ந்த தேதி செப்டம்பர் மாதம் 8-ந் தேதி. அவர்கள் சேர்ந்த துறையில் அன்னையின் சிறிய கோவில் இருப்பது அவர்களுக்குத் தெரியவந்தது. ஆயினும் தங்கள் பொருத்தனைப்படி ஒரு கோயிலமைக்க முன்வந்து முடித் தனர். அதன் நீளம் 24 அடி, அகலம் 12 அடி. ஆலயம் அமைத்தாயிற்று. அன்னையின் திருச்சுரூபம் வேண்டுமே! இதனைத் தங்கள் தேசத்திலிருந்து கொண்டுவருவதா, அல்லது பழைய கோவிலிலுள்ளதையே கொண்டுவைப் பதா என்ற ஆலோசனையில் ஈடுபட்டிருந்தனர். இந்த்

வேளையில் பழைய கோவிலில் இருந்த சுரூபம் அற்புதமாய்ப் போர்த்துக்கீசியரின் புதுக்கோவிலின் பீடத்தில் எழுந்தருளி வந்ததாகச் சொல்லப்படும். ஆரோக்கிய அன்னை அமர்ந்திருந்த திருப்பீடத்தை அணிமணிகளால் அழகுசெய்தனர். சைனுவிலிருந்து கொணர்ந்த பீங்கான் தட்டுக்கள் பீடத்தில் வனப்புற அமைந்தன. இவற்றில் பொதுவாய் வேத சம்பந்தமான வரலாறுகளும், சிறப்பாய் சேசுநாதரின் சீவிய வரலாற்றுச் சம்பவங்களும் சித்திரங்களாக வரையப்பட்டுள்ளன. போர்த்துக்கீசிய மாலுமிகள் கட்டிய கோயில் முற்றிலும் தகர்க்கப்பட்டுவிட்டது. என்றாலும், அவர்கள் அமைத்த பீடமும் பீடத்தைச் சார்ந்தவைகளும் இன்னமும் அப்படியே பாதுகாக்கப்பெற்றிருக்கின்றன. விசுவாசிகளின் ஆழ்ந்த அன்பின் சின்னத்திற்கு அரண் செய்வதாக "கோத்திக்" சிற்பத்திறத்தில் அமைந்து விண்ணை முட்டும் இரு கோபுரங்களுக்கிடையே கம்பீரமாக எழுந்து தோன்றுகின்ற இக்கோவிலின் புனிதப் பேரழகு கலைக் கண்ணோடு நோக்குவார்க்குப் பெருங் களிப்பினை அளிப்பதாகும்.

வேளாங்கண்ணிக்கு யாத்திரைக்காரர்கள் நாள் தோறும் வந்தவண்ணமாகவே இருக்கின்றார்கள். ஆதலின் அங்கு வருநாட்களெல்லாம் திருநாட்களே. ஆயினும் அத் திருப்பதியின் முக்கியமான திருநாள் தேவ அன்னையின் பிறப்பின் திருநாள். ஆகஸ்ட் மாதம் 29-ம் தேதி மாலை கொடியேற்றம். செப்டம்பர் மாதம் 8-ந் தேதி நிறைவுத் திருநாள். கர்த்தர் திருப்பாடுகளின் திருவிழா சமயத்திலும் யாத்திரிகர் கூட்டமாய்க் கூடுவர். ஆனால் செப்டம்பர் திருவிழாவில்தான் அலையாடும் சமுத்திரத்தோடு போட்டியிடும் ஆரவார ஜன சமுத்திரம். அப்பெருநாளில்

வேளாங்கண்ணிச் சிற்றூர் ஒரு பெரும் பட்டண மாய்ப் புலப்படும். கடை கண்ணிகள் நிறைந்திருக்கும். தண்ணீர்க் கஷ்டம் இராது. கிணறுகள் போகக் குழாய் களும் பூமியில் இறக்கப்பட்டுத் தண்ணீர் விநியோகமாகும். வீடுகள் விடுதியாய் மாறி உதவியும், சத்திரஞ் சாவடிகள் நிரம்பியும் தென்னந்தோப்பில் யாத்திரிகர் திரள் திரளாய்த் தங்கியிருப்பர். மருத்துவ சேவைக்காக மருந்துச் சாலை இராப்பகலாய்த் திறந்திருக்கும். போலீஸ் பந்தோபஸ்து குறைவின்றி இருக்கும். திருவிழாவுக்கு வருவார் சௌகரி யங்களைக் கருதிக் கட்டளைக் குருவானவர் பெருந்தொகை செலவிடுகின்றார். அரசாங்கமும் பண உதவி செய்கிறது.

ஆரோக்கிய அன்னை ஆலயத்தின் அழைப்பை ஏற்றுத் திருநாள் காலங்களிலும் ஏனைய நாட்களிலும் கிறிஸ்துவர் களும் பிற சமய அன்பர்களும் கூட்டம் கூட்டமாகக் குடும்பம் குடும்பமாக வருகின்றனர். அன்னையின் ஆதரவு நாடி வருவார் பலர். அவளுடைய அருந்துணை பெற் றமைக்கு நன்றி செலுத்த வருவார் மிகப் பலர். உடல் நோய் தீர்க்க வருவார் பலர். உள நோயும் தீர்த்துத் திரும்புவார் மிகப் பலர்.

பக்தகோடிகளின் பாதகாணிக்கைகள் ஒரு பொருட் காட்சி சாலையில் இருக்கின்றன. இது கட்டளைக் குரு வானவர் அறையை அடுத்துள்ளது. சாதாரண மெழுகு வர்த்தியிலிருந்து விலையுயர்ந்த நினைவுச்சின்னங்கள் வரை இதில் இடம் பெறுகின்றன. கை, கால், இதயம், நுரை யீரல் முதலிய உறுப்புக்கள் வெள்ளியால், தங்கத்தால் செய் யப்பெற்றுக் காணிக்கையாக அளிக்கப்பெற்றிருக்கின்றன. இவை அந்தந்த உறுப்புக்களில் உண்டான நோய் ஆரோக்கிய அன்னையின் அனுக்கிரகத்தால் நீங்கியதின்

அறிகுறியாக அன்பளிப்பாக அளிக்கப்பெற்றவை. இலங்கை, பர்மா முதலிய இடங்களிலிருந்து வந்த தேங்காய்கள், காசடைத்த மூங்கில் உருளைகள் முதலியனவும் இருக்கின்றன. இவை ஆரோக்கிய மாதா கோவில் வேளாங்கண்ணி என்றோ, வேளாங்கண்ணி என்றோ விலாசம் பொறிக்கப் பெற்றுக் கடலில் எறியப் பெற்றனவாம். இவைகளை ஆழியின் அலைகள் அடித்துக்கொண்டு வந்து வேளாங்கண்ணிக்கரையில் சேர்த்தனவாம்.

இந்தியாவின் பல திசைகளிலிருந்தும் இங்கே யாத்திரிகர்கள் வருகின்றார்கள். இலங்கை, மலேயா, பர்மா முதலிய அயல் நாடுகளிலிருந்தும் யாத்திரிகர்கள் வருகின்றார்கள். இதுவரை இந்தத் திருத்தலத்தை எந்தப் பத்திரிகையும் பிரபல்யப்படுத்தவில்லை. இங்கு வந்துபோகும் பக்தர்களே இதன் விளம்பரக்காரர்கள். இங்கு கால்நடையாக வந்துபோகும் கணக்கற்ற பிச்சைக்காரர்கள் இத் தல மகிமை பாடும் பக்திப் பாவலர்கள். நம் தென்னிந்தியாவின் மூலை முடுக்குகளிலெல்லாம் ஆரோக்கிய அன்னையின் பெருமையை அவர்கள் பாடிப் பரவி வருகின்றார்கள்.

தரங்கம் பாடும் சமுத்திரக் கரையில் ஆன்மசாந்தியின் சின்னமாய் திருக்கோவில் விளங்குகின்ற க்ஷேத்திரத்தின் சுற்று வட்டம் சுகத்திற்காதாரமான சுத்த வட்டாரம். உப்பங் காற்றுக்கு உபமானம் இல்லை அல்லவா? கடற் காற்று உடல் நலம் செய்கின்றது. அதன் காட்சி உள நலம் செய்கின்றது. கிறிஸ்தவர்களிடையே "கீழ்த்திசையின் லூர்து நகர்" என்ற பெரும்புகழ் படைத்த வேளாங்கண்ணியின் திருக்கோவில் நிழலிருந்து இயற்கை எழில் அனுபவிக்க வருகின்றவர்களுக்குக் காலத்திற்கேற்ற சௌகரியங்கள் பெருகுதல் வேண்டும். இதனைக் கோவில் அதி

காரிகள் கருத்திற்கொண்டு அவ்வப்போது ஆவனசெய்வது வரவேற்கத்தக்கது.

இத்தலம் தஞ்சை மேற்றிராணியார் மேன்மைதங்கிய சந்தரம் ஆண்டவர் ஆளுகையின்கீழ் இப்போது அமைந்திருக்கின்றது. ரோமை மாநகரில் கலை பயின்று மேலை நாட்டின் க்ஷேத்திரங்களை நேரில் கண்டு அனுபவம் பெற்ற இச்சான்றோரின் ஆட்சியில் அமைந்துள்ள வேளாங்கண்ணி மேலும் மேலும்பிரபல்யப்படும் என்று நம்பலாம் புதிய அதிகாரிகளின் கண்காணிப்பில் நல்வசதிகள் நவமான முறையில் ஏற்படும் என்று எதிர்பார்க்கலாம்.

தெருக்கூத்து

நமது நாட்டில் கூத்து மிகவும் தொன்மை வாய்ந்தது. நன்மை பயக்கும் சாதனமாக ஏற்பட்டது. 'வேர்த்து ஆவி மயங்காது விளங்க நடமிடும்' தில்லை அம்பல வாணன் கூத்தரசன் என்றே பெயர் பெறுகின்றான். அவனது காரியக்கூத்து இடையீடின்றி நிகழ்கின்றது என்பர். அதனைப் பஞ்ச கிருத்தியப் பரமானந்தத் திருத்தாண்டவம் என்று பாராட்டி மகிழ்வர். ஆக்கல் அளித்தல் அழித்தல் அருளல் மறைத்தல் என்ற ஐந்தொழில்களும் அந்தத் திருக்கூத்திலிருந்தே தோன்றுவதாகச் சொல்லப்படும்.

உலகியல் வரம்பில் கூத்து என்று தோன்றியது என்று அறுதியிட்டுக் கூறமுடியாத பழமை உடையது. உள்ளம் நிறைந்து உவகை உணர்ச்சிகள் உயர்ந்தோங்கு மிடத்து மனிதரிடத்து இயல்பாய் எழுஞ்செயல் கூத்தே. தூய மனத்தின் பொங்கலே இயற்றமிழ் என்பர். தூய

வாயின் முழக்கத்தை இசைத்தமிழ் என்பர். தூய மெய் யின் இயக்கத்தைக் கூத்துத் தமிழ் என்பர். இவ்வாறு வகுத்துரைத்தவர் முத்தமிழ் வல்லராகிய பேரறிஞர்.

'குழந்தையும் தெய்வமும் கொண்டாடும் இடத்தில்' என்ற பழமொழியை நாம் பலகாலும் கேட்டிருக் கின்றோம் அல்லவா? கொண்டாடும் என்ற சொற் றொடரை ஒருசொல் நீர்மையதாகவே கொண்டு விடுகின் றோம். கொண்டு + ஆடும் என்று பிரித்துப் பொருள் காண்கிற காலத்தில்தான், குழந்தையால் மகிழ்வோன், அதனைத் தலையிற் கொண்டு ஆடும் நிகழ்ச்சியும், தெய்வத் தால் மகிழ்வோன் அதனைத் தலையில் சுமந்தாடும் நிகழ்ச்சி யும் நம் கண் முன்னர்க் கொணர்வோம்.

கூத்து வகையின் இலக்கணங்கூறும் நூல்களாகக் கேட்கப் பெறுவன இந்திரகாளியம், கூத்தநூல், முறுவல், சயந்தம், செயிற்றியம், பஞ்சபாரதீயம், பரதம், பரதசேனு பதியம், குணநூல், மதிவாணம், சுத்தானந்தப் பிரகாசம் என்பன. இவற்றுள் பல முழுமையும் கிடைக்குமாறில்லை. கிடைக்கப்பெறும் சூத்திரங்கள் கொண்டு கூத்தின் தன்மையை ஒருவாறு நிர்ணயிக்கலாம்.

கூத்துக்கள் அரங்குகளிலேயே ஆடப்பெற்றன. 'கூத்தாட்டவை' என்று வள்ளுவர் குறிக்கின்றார். புறநானூறு "கூத்தர் ஆடுகளம்" இருந்ததைப் புலப் படுத்துகின்றது. கம்பர் காலத்தில் "ஐய நுண் இடை யார் ஆடும் நாடக அரங்குகள்" நாடெங்கும் இருந்திருத் தல் வேண்டும். 'கூத்துக் களரி' என்பது தொன்று தொட்டு வருகின்ற தொடர்.

பழமையாய்ப் பகுக்கப்பெற்ற வகைக்கூத்து புகழ்க் கூத்து, வேத்தியல் கூத்து, பொதுவியல் கூத்து, வரிச்சாந்

திக்கூத்து, சாந்திக்கூத்து, ஆரியக்கூத்து, தமிழ்க் கூத்து, தேசியக்கூத்து, மார்க்கக்கூத்து ஆகிய எந்தப் பகுப்பிலும் சேர்க்க இயலாதது தெருக் கூத்து. தெருக் கூத்துக் களுக்கு வானமே கூரை; கோவிலைச் சார்ந்த நெடு வெளியோ நடுச்சந்தியோதான் ஆடுகளம். தொடர்ந்து தொடர்ந்து ஆடி ஆடிப் பக்குவம் பெற்ற பரம்பரை யினரைக் கொண்டு சுருங்கிய செலவிலும் குறுகிய முயற்சியிலும் நடைபெறுவது தெருக்கூத்து. பாடுவோர் நடிப்போர் திறத்திற்கே பெருமதிப்புத் தருதற்கு இட மாவது தெருக்கூத்து. கண் கவர் திரை அமைப்போ காட்சி ஜோடனையோ இன்றிக் கதா பாத்திரங்களின் நடிப் பின் மேன்மையால் வளம்பெறுவது தெருக்கூத்து. இதிகாசக் கதைகளையும், புராண சம்பவங்களையும், சன் மார்க்க போதனைகளையும், சீர்திருத்தக் கருத்துக்களையும் உள்ளீடாகக் கொண்டு பாமர மக்களுக்குக் களிப்பின் மூலம் கருத்தூட்டும் கலைச்சாலை தெருக்கூத்து. உழைத் துக் களைத்த பாட்டாளி மக்களுக்குப் புத்துணர்ச்சியும் ஆர்வமும் ஊட்டும் சக்திக் கருவூலம் தெருக்கூத்து. பொதுஜன ரஞ்சகமாக நடத்தப்பெற்ற தெருக்கூத்துக் கள் பல நூற்றுண்டுகளாக உயிர்ப்பொலிவுடன் இலங்கி வருவனவாயின.

இராமாயணமும் பாரதமும் நம் தேசத்தில் படித்தவர் படியாதவர் என்ற பாகுபாடு இல்லாமல் எல்லோராலும் விரும்பி அறியப்பெறும் சிறந்த பெருங்கதைகள். கம்பரும் வில்லியாரும் இவற்றை நம் தமிழகத்தில் கற்றோர்க்கிதயம் களிக்க அளித்தார்கள். கற்றோரேயன்றி மற்றோரும் கண்டு கேட்டு மகிழும்படியாக இக்காவியங்களை நாடக அமைப்பில் உருவாக்கித் தெருக்கூத்துக்கு உதவியவர்கள்

பலர். அவர்களுள் முக்கியமாகக் குறிப்பிடத்தக்கவர் அருணசலக் கவிராயரும் இராமச்சந்திரக் கவிராயருமாவர். அரிச்சந்திர புராணமே அரிச்சந்திர நாடகமாக தெருக் கூத்தில் மருவி வருகின்றது. வீரச்சுவைக்கு இரணியன் கதை. சோகச் சுவைக்கு அரிச்சந்திரன் கதை. இலக்கிய ரசனையாளர்க்கு இளங்கோவடிகள் இயற்றிக் கொடுத்த சிலம்புச் செல்வத்தைப் பாமர மக்களுக்குப் பொருந்த அமைத்துக் கொடுத்தவர்கள் தெருக்கூத்து ஆசிரியர்களே. சிறுத்தொண்டர் விலாசம், திருநீலகண்ட நாயனர் விலா சம், மீ னு ட் சி ய ம் மை நாடகம், தாருகவன விலாசம் தெருக்கூத்திற்கமைந்த நாடகங்கள். மன்மதனைச் சிவ பெருமான் எரித்த கதை மிக விறுவிறுப்புடன் நடிக்கப் பெறும் தெருக்கூத்து. மார்க்கண்டேயன் கதையும் இத் தகைய கவர்ச்சி தரும் நிகழ்ச்சியே. தெருக்கூத்து துறை யில் "அப்பாசு" நாடகமும் "அல்லி பாதுஷா" நாடகமும் முஸ்லீம்கள் வழங்கிய நாடகங்கள். "ஞானத் தச்சன்" "தேவசகாயம் பிள்ளை வாசகப்பா" "ஞான சௌந்தரியம் மாள் நாடகம்" "எஸ்தாக்கியர் நாடகம்" கிறிஸ்துவர்கள் தந்த நாடகங்கள். இந்நாடகங்கள் யாவும் சர்வ சமயத் தாராலும் போற்றப்படுவன.

தெருக்கூத்துக்கள் நெடுங்காலமாக நமது கிராமங் களில் நடைபெற்று வருகின்றன. நம் கிராமங்களுக் கேற்ற சாவகாசமான நிதானப் போக்கிலேயே இவை நிகழும். இரவு ஒன்பது மணிக்கு இன்ன. கூத்து இன்ன இடத்தில் நடைபெறும் என்று காலையிலேயே அறிவிப் பார்கள். கூத்தின் காலம் பெரும்பாலும் வேனில் விழாக் காலமாக இருக்கும் கோவிலை அடுத்த திறந்த வெளியில் கிராமத்து ஜனங்கள், அக்கம் பக்கத்து கிராம ஜனங்கள்

வந்து கூடுவர். பலர் பாயும் தலையணையுமாக வருவர். சிலர் பட்சணங்களோடு வருவர். ஒன்பது மணி என்றால் பத்தாகும். பத்து பதினொன்றானாலும் அதனாலே ஜனங்களிடையே ஒரு விதமான ஆத்திரமோ அதிருப்தியோ உண்டாகாது. எல்லாப் பெரிய மனிதர்களும் வந்து சேர்ந்த பின்னரே ஆட்டம் தொடங்கும். இரண்டுபேர் ஒரு வெள்ளைத் துணியைக் குறுக்காக சபை எதிரில் பிடித்துக் கொள்வார்கள். அத்திரைக்குப்பின் கூத்தாடிகள் நின்று கொண்டு இரண்டு மூன்று நிமிடங்கள் தாளம் தட்டிப் பாட ஆரம்பிப்பார்கள் பின்னர் கட்டியங்காரன் காட்சி அளிப்பான். வரும்போதே 'கட்டியங்காரன் வந்தானையா' என்று ஆர்ப்பாட்டத்தோடு தன்னை அறிமுகப்படுத்தியே ஆஜர் ஆவான். கூத்திற்கேற்றபடி நாடக பாத்திரங்கள் ஆடிக்கொண்டும் பாடிக்கொண்டும் வருவார்கள். அர்ச்சுனன் போன்ற பெரிய பாத்திரங்கள் வரும்போது கட்டியங்காரன் அவர்கள் வரவை பெரிய ஆரவாரத்தோடு அறிவிப்பான். நடிகர் அனைவரும் காலில் சதங்கை அணிந்திருப்பார்கள். ஒரு குறிப்பிட்ட காலத்தில் கூத்தை முடிப்பதில்லை. விடிந்துவிட்டால் கூத்தை நிறுத்துவார்கள். விட்ட இடத்திலிருந்து அடுத்து வரும் நாட்களில் தொடர்பு அறுதபடி நடத்தி முடிப்பார்கள்.

கூத்தில் வருவோர் 'வேஷந்தரிக்கிறார்கள்' என்று சொல்லுவதில்லை. 'வேஷங்கட்டுகிறார்கள்' என்றே சொல்லுவதுண்டு. ஆண் வேடங்கட்டுபவர் காலுக்கு சல்லடம் போன்ற உடையை உள்ளே கட்டி அதற்குமேல் பெண்கள் அணியும் பாவாடை போன்றதைக் கட்டியிருப்பார்கள். அவர்கள் சுழலும்போது இந்த ஆடையும் சுழலும். முடி கவசம் இவை மரத்தால் செய்யப்

பட்டவை. கண்ணுடிக் கற்கள் அழுத்தப்பெற்றவை. பெரும்பாலும் ஆண்பாலரே பெண்பாலர் வேஷங் கட்டுவர். கூத்தர் பூசும் வர்ணம் அரிதாரமும் செந்தூரமும் கரிப்பொடியுமாகும். அரிதாரம் முகத்துக்கு மஞ்சள் வர்ணம் கொடுக்க உபயோகமாகும். செந்தூரம் உதட்டில் செந்நிறம் காட்டப் பயன்படும். கரிப்பொடி புருவத்தில் கன்னங்கரேல் என்ற நிறத்தை உண்டாக்கும்.

பட்டினத்தில் வசிக்கும் பெரிய நடிகர்களும் கிராமக் கூத்தர்களிடமிருந்து கற்றுக்கொள்ளத்தக்க விசேடங்கள் உண்டு. இவைபற்றி நாடகப் பேராசிரியர் திரு. சம்பந்த முதலியார் அவர்கள் தாம் நேரிற் கண்ட ஒரு சம்பவம் சொல்லுகிறார்கள்.

"தமிழ் நாடகமானது மிகுந்த க்ஷீண திசையை அடைந்த காலத்தும் தெருக்கூத்துக்களாகிய கிராமக் கூத்துக்கள்தான் 'நாடகத் தமிழ்' என்று ஒன்றிருக்கிறதென்னும் பெயரைக் காப்பாற்றி வந்தன. அக்கூத்துக்கள் தற்போது மிகுந்த தாழ்ந்த ஸ்திதிக்கு வந்துள என்பதற்கும் சந்தேகமில்லை. அப்படி இருந்தும் அவைகளிடம் சில குணங்களும் இருக்கின்றன என்பதற்குத் தடையில்லை. பெரிய வேஷங்கள் ஒருபுறம் இருக்க, சில்லரை வேஷங்கள் மிகவும் ஒழுங்காயும் தத்ரூபமாயும் இருந்தன வென்பதற்கு ஐயமில்லை. இதற்கு ஓர் உதாரணங் கூறுகின்றேன். சில வருடங்களுக்கு முன்பு சென்னையில் ஒரு பிரபல நாடக சபையினர், விக்டோரியா மண்டபத்தில், அரிச்சந்திரா நாடகம் நடத்தினர். அதில் வெட்டியானுக வேடம் தரித்த ஒரு நடிகர் தன் மீசையை ஸ்பிரிட் கம் (Spirit Gum) வைத்து ஒட்டிக்கொண்டு வந்தார். அந்தக் கோந்து சரியாக ஒட்டாதபடியால் மேடையில் அவர்

நடிக்கும்போதே, பாதி மீசை விழுந்துவிட்டது! மேடையின் மீதிருந்த மற்ற நடிகர்களே இதைக் கண்டு நகைத்தார்கள் என்ருல், நாடகம் பார்க்கவந்த சபையோரைப் பற்றிக் கேட்கவேண்டியதேயில்லே. பாதி மீசை கீழே விழுந்துவிட்ட அந்த நடிகருக்கு இந்தப் பெரும் நகைப்புக்குக் காரணம் தெரியவில்லே. 'என்னேப் பார்த்து நகைக்கிறீர்களா' என்று கோபத்துடன் மீசையில் கைபோட அப்பொழுதுதான் அவருக்குப் பாதி மீசை விழுந்துபோன விஷயம் தெரிந்தது. இதே வெட்டியான் வேஷம் குணம்பேட்டுக்கு அடுத்த ஒரு கிராமத்தில் கூத்து நடந்தபோது அக்கிராம வேஷதாரி நடிக்கப் பார்த்தேன். அவன் மீசை மிகவும் சரியாக இருந்தது. இரவில் அவனேப் பக்கத்தில் அழைத்து நான் பார்த்த போதிலும் அது ஒட்டிய மீசையாகக் காணப்படவில்லே. அவ்வளவு சுபாவத்திற்கு ஒத்திருந்தது. மறுநாள் காலே, அந்த வேஷதாரி, நான் இறங்கி இருந்த வீட்டிற்கு வந்தபொழுது, அவனேக் கேட்டதில், அந்த மீசையை அத்திப் பால்கொண்டு ஒட்டியதாகவும் அது சுலபமாய் விழுந்து விடாதென்றும் கூறிஞன். ஆகவே நமது பட்டினங்களில் வசிக்கும் பிரபல நடிகர்களும் கிராம நாடகசாலே நடிகர்களிடமிருந்து கற்கவெண்டிய சில விஷயங்கள் உள."

பழங்காலத்தில் கலேயாக ஓங்கிய தெருக்கூத்து இக் காலத்தில் மிகவும் சீர்கேடான நிலேக்கு வந்து செல்வாக்கிழந்து தவிக்கின்றது. இந்த இழி நிலேக்குப் பல காரணங்கள் உள. கண்ணுக்கும் செவிக்கும் கருத்திற்கும் ஒரு சேர விருந்தளிக்கும் சினிமா கிராமங்களிலும் பரவி வருகின்றது. இதனுல் கிராமங்களில் தெருக்கூத்தைப் பேணுவார் தொகை அருகி வருகின்றது. பனி, குளிர்,

காற்று முதலியவற்றிற்கு ஆளாகாமல் சுகமான வசதிகளுடன் அரங்குகளில் ஆட்டம் காணும் கூட்டமே பெருகி வருவதில் வியப்பில்லை. தெருக்கூத்தில் புதுமையில்லை. ஒரு வார்ப்படத்தில் அமைந்த மாமூல் கதைகளே மீண்டும் நடிக்கப்பெறுகின்றன. திறமை வாய்ந்த நடிகர்கள் பொருள் வருவாய் சூன்யமான தெருக்கூத்தில் தலைப்பட ஒருப்படவில்லை. முற்காலத்தைப்போல பெருஞ் செல்வர்கள் தெருக்கூத்தை ஆதரிக்க முன்வரவில்லை.

தெருக்கூத்து இன்று கேலிக்கூத்தாக ஒதுக்கப்படுகின்ற அளவிற்கு வந்துவிட்டதென்றால் அதன் பெரும் பொறுப்பை அதில் ஈடுபட்டு நடிப்போரே ஏற்க வேண்டும். வரன் முறையாக வரும் பாரத காவியங்கள் புராண சம்பவங்கள் இவற்றைக் குலைத்துச் சிதைத்துக் கோரம் பண்ணிவிட்டார்கள் சில தெருக்கூத்தாளர்கள்.

பத்தினிப் பெண்மணியான கண்ணகி தன் கணவன் கள்வன் அல்லன் என்பதை நிலை நாட்டியபொழுது "பொன் செய் கொல்லன் தன் சொல் கேட்ட யானோ அரசன் யானே கள்வன்!" என்று மனம் வெடித்துக் கூறியவண்ணம் மன்னன் உயிர் நீத்தான் என்று உரைக்கும் சிலப்பதிகாரக் கதை எங்கே? பத்தினித் தேவியைப் பத்திரகாளித் தேவதையாக்கி பாண்டியனின் வயிற்றைக் கிழித்துக் குடலை எடுத்து மாலையாகப் போடச் செய்யும் தெருக்கூத்து எங்கே?

இந்நாளில், கையையும் கண்ணையும் இயக்கி முகக் குறியாலும் பிற வகையாலும் விறல்பட ஆடும் அபிநயம் என்ற ஊமைக்கூத்தும் உயிர்பெற்று உயர்ந்து வருகின்றது. இசைப்பாட்டு, இன்னுரை, எழிலமை நடிப்பு ஆகிய பல்வகைத் திறமும் ஒருங்கியைந்த தெருக்கூத்தும்

உயிர் பெற்றோங்க வேண்டும். கதை அமைப்பிலும் பேச்சிலும் காலத்திற்கேற்ற கருத்தும் நடமும் இசையும் இடம்பெறவேண்டும். தெய்வக் கதைகளை அடுத்து, அரசர்கள் பெருமை, வீரர்கள் மாண்பு விளங்கும் வரலாறு கள் நிறையச் சேர்க்கவேண்டும்.

சென்றகாலத் தெருக்கூத்தினை நினைவில் இருத்தி அதனை நிகழ்காலத்திற்கேற்பத் திருத்த முயல்வோரே எதிர் காலத்திற்கு இயைந்ததைக் கருதிச் செய்தவர் ஆவர்.

நந்திக்கலம்பகத் தோற்றம்

தந்திவர்ம பல்லவனின் மைந்தன் நந்திவர்ம பல்லவன் இன்றைக்கு ஏறத்தாழ ஆயிரத்து நூறு ஆண்டுகளுக்கு முன்பு தொண்டை மண்டலத்தை ஆண்டு வந்தான். வர லாற்று வல்லுநர் கல்வெட்டு கர்ண பரம்பரை முதலிய சான்றுகளை முன்னிறுத்தி இவனுடைய ஆட்சிக் காலம் கி. பி. 825 லிருந்து 850 வரை நிலவியிருந்தது என்று வரையறுத்துக் கூறுவர். இந்த நந்திவர்ம பல்லவனைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு பாடப் பெற்றதே நந்திக் கலம்பகம்.

எத்திசையும் புகழ் மணக்க எழில் ஆட்சி செய்த நந்திவர்மனுக்குக் கலம்பக ஆசிரியர் நாற்பதிற் றமேற்பட்ட பாராட்டுப் பெயர்களை அளித்து மகிழ்கின்றார். "மல்லை வேந்தன் மயிலை காவலன் பல்லவர் தோன்றல் பைந்தார் நந்தி" என்று பரவுகின்றார். இவனது ஆட்சி வட நாடு வரையில் வியாபித்திருந்த தென்பதும், இவன் சோணாடு, குடகு முதலிய நாடுகளுக்கும் அதிபதியாக விளங்கினான் என்பதும், இவனது கீர்த்தி உலகளாவிய கீர்த்தி என்பதும்,

இவன் குணஞ் செயல்களால் குன்றேறி நின்றவன் என்பதும் இவனே ஆசிரியர் கங்கை மணாளன் சோணாடன் உறந்தையர் கோன் குவலய மார்த்தாண்டன் பாராளுங் கோமான் சந்திரகுலப்பிரகாசன் நயபரன் என்று பலவாறு போற்றிப் புகழ்வதால் புலப்படுகின்றன. இவனுக்குத் தலைநகரங்களாக விளங்கியவை காஞ்சிபுரம், மகாபலிபுரம், மயிலை ஆகிய மூன்றும் என்று தெரிகின்றது. பைந்தமிழ் நந்தி, தமிழ் நந்தி என்ற தொடர்கள் இவனுடைய தமிழ்ப் புலமையையும் தமிழ்ப் பற்றையும் பறைசாற்றுகின்றன.

புலவர் நாவில் பொருந்திய நந்திவர்மன் கல்வியில் சிறந்தவன்; கலைஞரின் காவலன்; வள்ளல் தன்மை வாய்ந்தவன்; வாய்மை திறம்பாதவன்; அருந்திறல் மிக்கவன்; சைவ சீலன்; சிவநெறி தழைக்கவும் இறைவனடியார்கள் இன்பம் எய்தவும் திருப்பணிகள் பல செய்தவன். இவன் காலத்துப் புலவர் சிகாமணியாகிய பாரதம் பாடிய பெருந்தேவனார் இவனது பண்பு நலன்களை ஓர் அழகிய வெண்பாவில் அமைத்துக் காட்டுகின்றார். தெள்ளாற்றில் வாகை சூடிய இந்த வீர திலகத்திற்கு நேரானவர் யார் என்று இறுமாந்து கேட்கின்றார்.

வண்மையால் கல்வியால் மாபலத்தால் ஆள்வினையால்
உண்மையால் பாராள் உரிமையால்—திண்மையால்
தேர்வேந்தர் வானேறத் தெள்ளாற்றில் வென்றானோ(டு)
யார்வேந்தர் ஏற்பார் எதிர் ?

கலம்பகத்தில் மிகப் பழமையானதும் சொற்சுவை பொருட்சுவை நிரம்பியதும் வரலாற்றுக் குறிப்புக்களை வாரி வழங்குவதுமான நந்திக் கலம்பகத்தின் ஆசிரியர் இன்னார் என்று விளங்கவில்லை. சென்னை புரசைப் பாக்கம் விவேக விளக்கம் அச்சகத்தில் எண்பது ஆண்டு

களுக்கு முன்பு பதிப்பிக்கப்பெற்ற நந்திக் கலம்பகத்தில் "நந்திக் கலம்பக மூலபாடம் இஃது மேற்படி அரசரது கநிஷ்டரால் செய்யப்பட்டது." என்ற விவரம் காணப் படுகின்றது. ஆனால் இதனைத் தொடர்ந்து வந்துள்ள ஏனைய பதிப்புக்களில் எவற்றிலேனும் இந்த விவரம் காணப்படுமாறில்லை.

நந்திவர்மனின் கநிஷ்டரே. அதாவது நந்திவர்மனின் தம்பியே புலமை வாய்ந்த அந்த நல்ல தம்பியே இந்தக் கலம்பகத்தின் ஆசிரியர் என்ற கருத்தை உள்ளிடாகக் கொண்ட ஓர் அற்புதமான கதை செவிவழிச் செய்தியாகக் கேட்கப்படுகின்றது.

அபிதான சிந்தாமணியில் சொல்லப்பெற்றுள்ள கதைக் குறிப்புக்கும் பரம்பரையாக வரும் கதைப் போக்கிற்கும் ஒரு சில வேறுபாடுகள் இருக்கின்றன. அறம் வைத்துப் பாடப்பெற்ற செய்தியில், வேண்டுமென்றே வசைக்குறிப்புக்கள் வைக்கப்பெற்ற செய்தியில் இவை மாறுபடுவன அல்ல.

அபிதான சிந்தாமணியில் காணப்பெறும் கதைக் குறிப்பு வருமாறு :—நந்திவர்மன் பொருளை இரவலர்க்குச் செலவு செய்தலில் பொருது இவனைக் கொலைபுரிய இவன் சகோதரன் வசையாகக் கலம்பகம் பாடி அதில் ஒரு கவியை ஒரு புலவனை அவன் ஏகாந்தத் தலத்துச் சுவரைத் துளைத்துக் கூறிவிட்டு ஓடச் செய்தனன். அவ்வகை செய்த புலவன் கூறிய ஒரு செய்யுளைக் கேட்டு அக்கலம் பகச் செய்யுள் முழுமையும் கேட்க ஆவல் கொண்டவனாக இருக்கும் காலத்தில் ஒருநாள் நகரை வலம் வருகையில் பாடகி ஒருத்தி வீணையில் பாடக்கேட்டு 99 பந்தல்களைச் சுடலை அளவு போடச் செய்வித்துச் சுடலையில் சிதை

அடுக்கச் செய்வித்துப் பாடகியை அழைப்பித்து ஒவ்வொரு பந்தலில் ஒவ்வொரு செய்யுளைக் கேட்டு வருகையில் அப்பந்தல்கள் தீப்பற்றக் கண்டும் மனஞ் சலியாது நூறுவது செய்யுளைக் கேட்க ஆவல்கொண்டு சிதை மேலிருந்து அதைக்கேட்க சிதை தீப்பற்ற அரசன் உயிர் நீங்கினன்.

செவி வழி வந்த கதை என்னவென்று காண்போம். நந்திவர்மனின் மாற்றாந் தாய்க்கு மைந்தர் நால்வர். அவருள் ஒருவன் மந்திரத்தில் தேர்ந்தவன். மற்றொருவன் தந்திரத்தில் சமர்த்தன். இன்னொருவன் வாள் போரில் வல்லவன். நான்காமவன் கவி சொல்லவல்ல கலை கைவரப் பெற்றவன். குறிப்பாக அறம்வைத்துப் பாடுவதில் நிகரற்றவன்.

நந்திவர்மன் மீது அழுக்காறுற்ற இத்தம்பியர் நால்வரும் தம்முள் கலந்து சதிசெய்து படைபலம் திரட்டித் துணைவரைச் சேர்த்துத் தம் தமையனோடு போர் செய்து பார்த்தனர். போர் முனையில் அவனை வெல்ல முடியாமல் முறியடிக்கப்பெற்றனர். "தம்பியர் எண்ணமெலாம் பழுதாக வென்ற தலைமான வீர துவசன்" என்று கலம்பக ஆசிரியர் கூறுவது இதனை உறுதிப்படுத்த வருவதுபோல அமைந்துள்ளது. தம்பியர் எண்ணமெல்லாம் தவிடு பொடியாக அவர்களை வென்று நந்திவர்மன் வெற்றிக் கொடி நாட்டிய செய்திக்கு அரண் செய்கின்றது.

ஆற்றல் நிறைந்த அண்ணனை எதிர்த்து வெல்லும் வகை தேடிய ஆசைவயப்பட்ட தம்பியர் நால்வருள் முதல்வனின் மந்திரத்தால் ஒன்றும் பலிக்கவில்லை. அடுத்தவனின் தந்திரமும் துணை செய்யவில்லை. மூன்றுவது தம்பியின் வாட்போர் வன்மையும் வியர்த்தமானது.

நான்காம் தம்பியின் கவித்திறமைதான் கைகொடுத்து உதவியது. எப்படி ? இந்தப் பாவலத் தம்பி ஒரு கலம்பகத்தைச் சொல்வதற்குக் காரணமாயிருந்தான். அந்தக் கலம்பகமோ, வேண்டுமென்றே அமைக்கப்பெற்ற வசைக் குறிப்புக்களையுடையதாய் நந்திவர்மனைக் கொல்லுவதற்குக் காரணமாயிற்று.

சிறிது சிறிதாக உள்ளங் கவர்ந்து உயர்ந்தோங்கிய சினத்தால் பொங்கிய கவிதையே இக்கலம்பகம் என்று கொள்வதற்குக் கதை இடம் தருகின்றது. ஒருவனைக் கொல்லவேண்டும் என்பதற்காக அறம் வைத்துப்பாடிய கலம்பகத்திலும் புலவன் அறத்தின் வழி நின்றவனாக, நடுநிலைமை தவறாதவனாக நந்திவர்மனை மிகச் சிறந்த முறையில் போற்றியிருப்பதை நாம் போற்றாமலிருக்க முடியாது.

பாடும் திறன்பெற்ற தம்பி தனது ஏனைய சகோதரர்களோடு சதியில் கலந்தான். தமையனை வெல்லச் சூழ்ச்சி செய்தான். கொல்லவும் துணிந்தான். அவர்களுடைய தூண்டுதலின் பேரில் வசைக் குறிப்புக்களை வைத்துக் கலம்பகத்தையும் புனைந்தான். குணங் கெடுக்கும் சினங் கொண்டுதான் பாடினான். ஆனால் தன் தமையன் இறந்து படவேண்டும் என்பதில் ஏனைய சகோதரர்களைப்போல அவன் நிரந்தரமாக மனங்கொள்ளவில்லை. மனமாற்றம் கொண்டான். துறவியானான். வாழ்க்கையில் திருப்புமையம் ஏற்பட்டது.

துறவிக்கோலம் பூண்ட பாவலன் இல்லங்கள் தோறும் இரந்துண்டு காலங்கழித்தான். சுரைக்குடுக்கையால் ஒரு யாழைச் செய்துகொண்டான். அதில் அவன் மீட்டிய கானம் கந்தர்வ கானமாக இசைத்தது. யாழுக்

கிசைந்த இன்னிசை பாடுவான். தான் முன்னொருகால் இயற்றிய கலம்பகப் பாட்டுக்களும் அவன் இசையில் கலந்துவரும். அப்பொழுது அவன் அறம் வைத்துப் பாடிய செய்தியை இப்பொழுது மறந்தே பாடினான். இந்தக் கலம்பகப் பாட்டைக் கருத்தூன்றிக் கேட்டாள் ஒரு கணிகை. அதில் வசைக் குறிப்புக்கள் உண்டு என்பதை அவள் அறிவாளா ? அவள் கலம்பகப் பாட்டின் நயத்தைப் பருகிப் பருகி அதன் வயப்பட்டு அதனை மனனஞ்செய்து நாள்தோறும் உளமுருகப் பாடி உவகையுறுவாள்.

ஒருநாள் ஊர்க் காவலர் இவளது பாட்டைக் கேட்டனர். அது தமது அரசனைப் பற்றியது. எனவே அவனுக்கு அதனை அறிவித்தனர். காவலனும் கணிகையின் பாடலைக் கேட்க விரும்பினான். கணிகையோ தனக்கு அப்பாடலைச் சொல்லி வைத்த துறவியே அதனைத் தக்கவாறு பாடுதற்கு உரியர் என்பதை ஒளிவு மறைவின்றி உரைத்தாள்.

அப்புறம் துறவியை அவளும் தேடினாள். அரச பரிவாரத்தினரும் தேடினர். எவராலும் தேடிக் காண முடியாத துறவி தானாகவே ஒருநாள் அரச அவைக்கு வந்தார். அரசன் கலம்பகப் பாடலைப் பாடுமாறு கேட்டான். துறவி தலையசைத்து மறுத்தார். அரசன் சீற்றம் கொண்டான். பாடும்படி வற்புறுத்தினான்.

கலங்கிய கண்களோடு நடுங்கிய குரலில் அந்தத் துறவி சொல்வார் : "பச்சை ஓலையில் நூறு பந்தல் அமையுங்கள். ஒவ்வொரு பந்தலில் அரசன் வீற்றிருந்து ஒவ்வொரு செய்யுளைக் கேட்கவேண்டும். பாட்டுப் பாடியானதும் பந்தல் எரிந்து அற்று விழும். இறுதிப்பாட்டு

இடுகாட்டில். அங்கே அமைத்த பந்தலின்கீழ் அரசன் தனக்குப் பிணச்சடங்குகள் யாவும் செய்து சவம்போலப் படுத்துக்கொள்ள வேண்டும். இறுதிப் பாட்டைப் பாடியானதும் அதனைக் கேட்டு மகிழ்ந்த அரசனது உடலில் தீப்பற்றும்; அரசன் விண்ணுலகு அடைவான்". இதைக் கேட்டதும் அரசவையில் மயான அமைதி நிலவியது. "இதற்குச் சம்மதமா ?" என்றான் துறவி. பாநயத்தால் ஈர்க்கப்பெற்ற பார்த்திபன் இன்பத் தமிழ்ப் பாட்டிற்குத் தன்னையே தத்தம் செய்யச் சித்தமாயிருந்த தியாகபூபன் "சம்மதம்" என்றான்.

துயர்க்கடலில் மூழ்கியிருந்த துறவி ஒவ்வொரு பாட்டாகப் பாடினான். ஒவ்வொரு பாட்டின் இறுதியிலும் ஒவ்வொரு பந்தல் எரிந்து வீழ்ந்தது. இறுதியில் நந்திவர்மன் இடுகாட்டில் ஈமப்பள்ளியில் நெஞ்சுரத்தோடு நிமிர்ந்து படுத்தான். துறவி இறுதிப்பாட்டை உணர்ச்சி பொங்கப் பாடினான். அதையும் உவப்போடு கேட்டுக் கொண்டிருக்கச் செந்தழல் நந்தியின் மேனியைத் தீண்டியது. முடிசார்ந்த மன்னன் பிடிசாம்பலானான்.

சோமேசர் முதுமொழி வெண்பா "நந்தி, கலம்பகத்தால் மாண்ட கதை நாடறியும்" என்று நவில்கின்றது. "பொள்ளா நுழைவழி போய்த்தலை நீட்டும் புலவர் முன் சொல் கள்ளாரும் செஞ்சொல் கலம்பகமே கொண்டு காயம்விட்ட தெள்ளாறை நந்தியெனும் தொண்டைமான்" என்று தொண்டைமண்டல சதகப்பாட்டு இக்கதையைச் செப்புகின்றது. நந்திக் கலம்பகத்தில் இயல்பாய்ப் பொருந்தியுள்ள கவிதைச் செழுமையையும் அதில் உளம் ஒன்றி லயித்திருந்த நந்திவர்மனின் தமிழார்வத்தையும் மேலும் பல மடங்காக மிகைப்படுத்திக் காட்ட

வேண்டும் என்ற ஆசை பற்றி எழுந்த இந்தக் கதை அதன் அடிப்படையிலேயே பல்வேறு புனைவுகளைக் கொண்டதாகக் காட்சி அளிக்கின்றது.

பன்னிருபாட்டியல் என்னும் இலக்கண நூல் கலம் பகச் செய்யுள் தொகை இன்னின்ன அளவில் இருக்க வேண்டும் என்று வகைப்படுத்திக் கூறுகின்றது. அந் நூல் அரசருக்குக் குறித்த செய்யுட்கள் தொண்ணூறே. இந்தக் கதையோ நூறு செய்யுட்களைப்பற்றிப் பேசும் கதை. கலம்பகப் பிரதியில் நூற்றுப்பத்துச் செய்யுட்களிருக்கின்றன தேவர்க்குக் குறிக்கப்பெற்ற நூறு செய்யுள் அளவையும் தாண்டிவிட்டது. முதல் பாட்டின் இறுதி அடுத்த பாட்டின் முதலாக வந்தமைகின்ற அந்தாதித் தொடை நந்திக் கலம்பகத்தில் அனுசரிக்கப் பெறவில்லை.

நந்திக் கலம்பகத்தின் கதைப் போக்கையும் பொருள் போக்கையும் பார்க்கும்போது இது நந்திவர்மனுக்கு சகோதரமுறையுடைய ஒருவனால் பாடப்பெற்றது அல்ல என்பது தெளிவாகின்றது.

வானுறு மதியை அடைந்ததுன் வதனம்
மறிகடல் அடைந்ததுன் கீர்த்தி
கானுறு புலியை அடைந்ததுன் வீரம்
கற்பகம் அடைந்ததுன் கரங்கள்
தேனுறு மலராள் அரியிடம் புகுந்தாள்
செந்தழல் அடைந்ததுன் தேகம்
நானும்என் கலியும் எவ்விடம் புகுவோம்
நந்தியே நந்தயா பரனே.

இந்தச் சோகமயமான பாட்டிலே ஒரு புரவலனை இழந்து தவிக்கும் ஒரு புலவனின் துயரக் குரலைக் கேட்

கின்றோமே தவிர சகோதர உறவின் ஒலியைக் கேட்கின்றோமில்லை. அதன் நிழலைக்கூடக் காணோம்.

நந்தியின் கொடைப் பெருமையே கலம்பகத்தில் பரவலாகப் பேசப்படுகின்றது. "நந்தி என்னும் நல்ல பெயருடைய உலகக் காவலன் மீது வளம்மிக்க நூல்களைப் பாடி அவனிடத்து உன்னதமான பல பரிசுகளைப் பெற்ற முன்னுள் இரவலர்கள் இப்போது மன்னர்களாகி விட்டார்கள். எனவே இனி இவ்வுலகில் இரவலர்கள் உண்டு என்று சொல்வது எல்லாம் இரவுக் காலத்தில் அலர்கின்ற, இரவு + அலராகிய குமுதங்களைக் குறிக்குமே யன்றி அந்த இரவலர்களையா குறிக்கப் போகின்றது?

இந்தப் புவியில் இரவலர்உண் டென்பதெலாம்
அந்தக் குமுதமே அல்லவோ—நந்தி
தடங்கைப் புரவலனைத் தண்தமிழால் பாடி
அடங்கப் புரவலர் ஆனர்."

இத்தொடக்கத்தனவாகிய பாடல்களில் எல்லாம் புரவலர் புலவர் தொடர்புகளே தோற்றஞ் செய்யப்பெறுகின்றன.

நந்திக் கலம்பக ஆசிரியரின் பெயரைக் கண்டு கொள்ளக்கூடாத காரணத்தாலும், கர்ண பரம்பரையாக வழங்குஞ் செய்தி ஒன்றே கலம்பகத்தின் ஆசிரியராக அந்நந்தியின் சகோதரர்களில் ஒருவரைச் சுட்டுவதாலும், அகப்புறச் சான்றுகளை ஆய்ந்து பாராது இதன் ஆசிரியர் நந்திவர்மனின் தம்பியருள் ஒருவரே என்ற தீர்மானத்திற்கு வருதல் பொருத்தமுடையதாகாது.

தன்னைப்பற்றிய வசைக் குறிப்புக்களுடைய பாட்டை இயற்றியவன் பொருள் அறிந்து பாட, அதனைப் பாட்டுடைத் தலைவன் செவிமடுத்துக் கேட்டால் அவனுக்கு அந்நிலையிலேயே மரணம் நிச்சயம் என்ற தன்மையும்

உறுதிப்பட்டதாக, அத்தலைவன் அதனை விருப்புடன் கேட்க இசைந்தனன் என்றால் அது அவனது கலை ஆர்வத்தைப் புலப்படுத்தும்படி சொன்ன அணிந்துரையே அன்றி அப்பட்டமான உண்மை உரை ஆகாது. கவிதை உலகிலுள்ள உயர்வு நவிற்சிபோல இதனைக் கதை உலகிலுள்ள உயர்வு நவிற்சியாகக் கொள்க. கதைக்கு ஆதாரங் காட்டவே வசைக்குறிப்புக்கள் வகையாகப் பயன்படுத்தப் பெறுகின்றன என்றும் கொள்வோமாயின் அது ஒருதலைப் பட்சமான கொள்கை ஆகாது.

பெயர் தெரியாத பாவலரும் பெயர் விளையாத பாவலருமான புலவர் வரிசையில் வருகின்ற நந்திக்கலம்பக ஆசிரியரின் நயந்தெரி பாடல்களைப் பயில்பவர்கள் இவர் அரசருடன் மனம் ஒத்துக் கலந்த ஒருமைப்பாடுடைய மெய்யன்பர் என்றும் நந்திக்கலம்பகத்தின் நந்தாவிளக்காக நிலைபெற்று வாழ்கின்ற கவிஞர் பெருமான் என்றும் வாயார மனதாரப் போற்றிப் புகழ்வார்கள்.

பண்பாட்டின் காவலன்

வீரமாமுனிவரின் விழுமிய வாழ்க்கை பழுதற்ற கல்வியும் வழுவற்ற தவமும் குறைவற்ற குணசீலமும் கனிந்து கமழ்ந்த தூய அர்ப்பண வாழ்க்கை. பொன்னை மாதரை பூமியை நாடாத புனித வாழ்க்கை. இறைவனின் இன்னருளையே இடையறாது நாடிய அறவொழுக்கம் தழைத்த துறவு வாழ்க்கை. நான் இவ்வுலகிற்கு வாழ்வு தர வந்தேன் என்று வாக்குரைத்த சேசுபரனின் செம்மை சான்ற நெறி நின்று அன்பையும் அருளையும் அனைவர்க்கும் வாரி வழங்கிய பரோபகார

வாழ்க்கை. நானே வழி, நானே உண்மை, நானே உயிர் என்று நவின்று மன்னுயிர் மீட்கத் தன்னுயிர் ஈந்த அன்பின் அவதார மூர்த்தியின் நல்ல செய்தியை அவனி யெங்கும் பரப்பும் திருமறைப் பணியில் திளைத்திருந்த தியாக வாழ்க்கை.

பெஸ்கி அடிகளார் தமது பெற்றோரையும் உற்றோ ரையும் விடுத்துத் தாம் பிறந்த பொன்னாட்டையும் அதன் சுக செல்வங்களையும் துறந்து ஏழாயிரம் மைல்களுக்கு அப்பால் உள்ள இத்தலியிலிருந்து நம் தமிழகத்திற்கு வந்தார். தானே தமிழரானார். தண்டமிழே தானானார். கவிஞர் பெஸ்கியர் தேம்பாவணியை இயற்றிய வகையில் அதனைத் தமிழ் மரபு குன்றாத முறையில் உருவாக்கி யுள்ளார். முனிவர் பிறப்பால் பிறநாட்டினர்; உள்ளத் தாலும் உணர்ச்சியாலும் உடையாலும் நடையாலும் பண்பாலும் பாவனையாலும்; நம்மவர்; நாடறிந்த நல்ல தமிழ் முனிவர்.

"சீரிய உலக மூன்றும்
செய்தளித் தளிப்ப வல்லாய்
நேரிய எதிரொப் பின்றி
நித்தவோர் கடவுள் தூய
வேரிய கமல பாதம்
வினையறப் பணிந்து போற்றி
ஆரிய வளன்றன் காதை
அறமுதல் விளங்கச் சொல்வாம்"

இவ்வாறு தேம்பாவணியின் சிறப்புப்பாயிரம் தொடங்கு கின்றது. எல்லா நூல்களும் மங்கல மொழிகொண்டு தொடங்கப் பெறுதல் வேண்டும் என்பது நமது மரபு. இதன்படி "சீரிய உலகம்" என்று தொடங்குகின்றார். மண்ணுலகம், விண்ணுலகம் பாதலம் என்னும் மூன்று

உலகங்களையும் படைத்துக் காத்து அழிக்கும் வல்லமை யுடையவராய்த் தமக்கு ஒப்பாரும் மிக்காரும் இல்லாதவ ராய் இருக்கும் ஒரே கடவுளின் நறுமணம் செறிந்த, தாமரை புரையும் காமர் சேவடிகளை நம் தீமைகள் அகலும்வண்ணம் உடலால் பணிவு தோன்ற வணங்கியும், வாயால் அன்பு தோன்றப் புகழ்ந்தும், சிறந்த வளன் என்னும் சூசைமாமுனிவரின் வரலாற்றை எடுத்துரைப் போம் என்கிறார். அறம் பொருள் வீடடைதலே நூலின் பயன் என்று நவில்வர் நம் ஆன்றோர். சூசைமாமுனிவரின் கதையைப் படிப்பார்க்கும் படிக்கக் கேட்பார்க்கும் பயன் கூறுகின்றார் வீரமாமுனிவர். அப்பயன் யாது? அறம் பொருள் இன்பம் வீடு ஆகியவற்றை அடைதலே அப் பயன். இந்நெறி தமிழ் நூல்களின் தொன்றுதொட்டுக் காணப்பெறும் செந்நெறி.

எழுத்தறியத் தீரும் இழிதகைமை தீர்ந்தான்
மொழித்திறத்தின் முட்டறுப்பானாகும்—மொழித்திறத்தின்
முட்டறுத்த நல்லோன் முதல்நூல் பொருளுணர்ந்து
கட்டறுத்து வீடு பெறும்.

என்ற பழம்பாடல் இங்கே நினைவு கூறுதற்குரியது.

நமது காப்பியக் கவிஞர்கள் அவையடக்கம் சொல் வதைத் தமது கடமையாகக் கொண்டுள்ளார். நிறைந்த பேரறிவுவாய்ந்த பெரும் புலவர்களும் தம்மைக் குறைந்த மதியுடையவராகவே கருதிக்கொள்வர். கல்வியிற் சிறந்த கம்பர் சொல்வதென்ன?

ஓசை பெற்றுயர் பாற்கடல் உற்றொரு
பூசை முற்றவும் நக்குபு புக்கென
ஆசை பற்றி அறையலுற்றேன் மற்றிக்
காசில் கொற்றத் திராமன் கதையரோ,

இதை அடியொற்றி வருவதே வீரமாமுனிவரின் அவையடக்கம்.

சூசையுற் றனவரங்கள் தூய்கடல் கடக்கவில்லா
ஓசையுற் றொழுகமிர்தம் உடைகடல் என்னாகண்ணி
பூசையுற் றதனைநக்கப் புக்கென உளத்தைத் தூண்டும்
ஆசையுற் றமனேனும் அருங்கதை அறையலுற்றேன்.

வரங்களால் நிறைந்த சூசையப்பரின் மான்மியத்தை விரித்துரைக்கும் நோக்கமெல்லாம் அதனை ஆர்வமுடன் பயில்வார் அந்த வளனைப்போலவே மறவழி விலகி அற வழி ஒழுகி அயலவர் துன்பம் துடைத்து ஆண்டவர்க்கு அன்பராகும் நிலைபெறுதல் வேண்டும் என்பதே ஆகும்.

புகழ் பூக்கத் தோன்றிய வளனுர் வாழ்க்கை அன்பில் திளைத்தெழுந்தது; அன்பில் செழித்தது; அன்பிலே தோய்ந்து தோய்ந்து வன்மையும் வனப்பும் வண்ணமும் திண்ணமும் பெற்றது. அன்புகொண்டு அவர் யார்க்கும் இன்பநிலையாய் இலங்கினுர். துன்பத்தால் வாடிய ஏழை மக்களின் துயர் துடைத்த இந்த விவேக முனிவரின் வாழ்க்கைக்கும், தேடிச் சோறு நிதம் தின்று பல சின்னஞ் சிறு கதைகள் பேசிப் பிறர் வாடச் செயல் பல செய்யும் வேடிக்கை மனிதர்களின் வாழ்க்கைக்கும் எத்துணை வேறுபாடு ?

இழிகுணத்தவர் தம்மிடத்துள்ள பொருளை இறுக முடிந்து வைத்து அதனைத் தம்முடையதாகவே கொண்ட தன்மை ஒன்றே உடையார். அதனைத் தாமும் அனுபவிப்பதில்லை. அறத்தின்பொருட்டாகப் பிறர்க்கும் அளிப்பதில்லை. வறுமையுற்றிருந்த சூசைமாமுனிவரோ

தம்து உடல் உழைப்பால் தேடிய பொருளை உவந்து அநுபவிப்பார். நற்குணமுடையவராகத் தம்மிடம் வந்து யாசிப்பவர்க்கும் மனநிறைவோடு அளித்து மகிழ்வார்.

அறிவு முதிர்ந்த தத்துவ ஞானியர்க்கும் அன்பு கனிந்த உத்தம பக்தர்க்கும் ஒருசேரத் தெய்வக் கலை விருந்தும் தேவநேயக் கவி விருந்தும் படைக்கின்ற திறத்தது தேம்பாவணி.

தன்வயத் தாதல் முதலிலன் ஆதல்
தகும்பொறி உருவின னாதல்
மன்வயத் தெல்லா நலமுள னாதல்
வயின்தொறும் வியாபக னாதல்
பின்வயத் தின்றி ஒருங்குடன் அனைத்தும்
பிறப்பித்த காரண னாதல்
பொன்வயத் தொளிர்வான் முதலெலா உலகும்
போற்றுமெய் இறைமையின் நிலையே.

என்று கடவுளின் குணங்களை நிரல்பட நவிலும் தேம்பா வணி குழந்தை சேசுவின் தெய்வீக வயப்பட்ட சூசை யப்பரைக்கொண்டு

அறந்தாய் தந்தை சுற்றமுமற்
றனைத்தும் நீயே கதிநீயே
பிறந்தாய் உலகிற் குயிரன்னோய்
பிறங்தெந் துயரும் எம்பகையும்
துறந்தாய் எங்கள் சிறை தீர்த்தாய்
துகள்பூட் டியவீட் டியர்வாயில்
திறந்தாய் இவையா வருமறியத்
திறன்செய் தருள்செய் திரங்காயோ ?

என்று நம்மிடத்துப் பரமன் காட்டுந் திறத்தைப் பக்தி உணர்ச்சிப் பெருக்குடன் எடுத்துரைக்கின்றது.

உண்மையான பக்தி உள்ளத்திலிருந்து மலரவேண்டும். சத்தியமில்லாத சடங்குகள் அர்த்தமற்றவை. வாழ்க்கையில்லாத வழிபாடு வீணானது. உண்மையான தேவ சேவை தூய்மையான மனத்தினின்று எழுவது என்பதை வற்புறுத்திய பான்மையில்

கோலமே வீணடா குளித்தல் வீணடா
சூலமே வீணடா துறவு வீணடா
காலமே மந்திரம் கதைத்தல் வீணடா
சீலமே கெடநசை செகுத்த லால்அரோ.

என்று திட்ப நுட்பமாகச் சொல்கின்றது தேம்பாவணி.

இந்த உலகில் நல்லவர்களும் துன்பம் உறுவானேன் என்று கலங்கி நிற்பார்க்குக் கலங்கரை விளக்கம்போல அமைந்துள்ளது. "தீதிலா இடமே வேண்டில் சேணுலகு எய்தல் வேண்டும்" என்று முதியவர் வடிவில் வந்த வானதூதன் வளனுர்க்கு உரைத்த வாசகம். குற்றமே இல்லாத இடம் வேண்டுமென்ருல், துன்பக் கலப்பே இல்லாத இடம் வேண்டுமென்ருல், பரிபூரண இன்பநிலை வேண்டுமென்ருல், மோட்ச உலகிற்குத்தான் போதல் வேண்டும். மனிதர் மனிதராக இருக்கின்றவரையில் உலகம் உலகமாகத்தான் இருக்கும். நல்ல மனத்தவர்களுக்கு நிறைந்த பேரானந்தம் இந்த நிலவுலகிலேயே தொடங்குகின்றது என்பது ஓரளவு உண்மையென்ருலும் தீதிலா இடமே வேண்டில் சேணுலகு எய்தல் வேண்டும் என்பதுதான் திரண்ட உண்மை.

தேம்பாவணி வளனுர் வரலாற்றை வருணிக்கும் காப்பியம் மட்டுமன்று. அது அறத்தின் அருங்கலம். பொருளின் பெட்டகம். இன்பக் களஞ்சியம். வான்

வீட்டின் வழித்துணைவன். ஞானக் கண்ணுடி. ஆதாம் செய்த வினையால் மன்பதை அடைந்த கேட்டையும் பிழைபட்ட மனுக்குலம், கர்த்தர் பிறப்பால், அவரது திருப்பாடுகளால், சிலுவை மரணத்தால், மரணத்தை வென்ற உயிர்த்தெழுதலால் மீட்கப்பெற்றதைச் சுட்டிக் காட்டும் சுடரொளி. கிறிஸ்துநாதரின் போதனை சாதனைகளைப் புலப்படுத்தும் இலக்கியப் பூங்கா. இறைவனின் இயல்பையும் தேவனுக்கும் மனிதனுக்கும் உள்ள தொடர்பையும் எடுத்து முழங்கும் மெய்யறிவுத் தூதன். ஆண்டவனின் பிள்ளைகளான மனிதர்களின் மேலான கதியையும்அவர்களுடைய ஆன்மநேய ஒருமைப்பாட்டையும் தெளிவுபடுத்தும் சஞ்சீவி. இறையன்பில் ஊன்றிய பிறர் அன்பின்வழியாக சமூக நல்லுறவையும் சமயப் பெருவாழ்வையும் காக்கும் பண்பாட்டின் காவலன்.

வாழ்க இலக்கியம்! வாழ்க பைந்தமிழ்!

Printed at Sri Bharathi Press, Choolai, Madras-7.

இதன் விலை 50 ந. பை.